பக்கங்கள்: 11

# காலைக்கதிர்

Kalaikkathir

விழியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 23 ஞாயிற்றுக்கிழமை 08.12.2024 கதிர் 031

# தமிழ் அரசுக் கட்சியுடன் மீள ஒட்ட ரெலோ முடிவு

## தலைமைக் குழுவின் கூட்டத்தில் தீர்மானம்

2024 பொதுத் தேர்தல் படுதோல்வியைத் தொடர்ந்து தமிழ் அரசுக் கட்சியுடன் மீண்டும் சேர்வது என்று ரெலோ அமைப்பின் தலைமைக் குழு நேற்று முடிவு செய்தது. தமது கோரிக்கையை தமிழ் அரசுக் கட்சி ஏற்றுக்கொள்ளாதபட்சத்திலேயேஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியில் தொடர்வது என்றும் அது முடிவு செய்தது.

ரெலோவின் தலைமைக் குழுக் கூட்டம் வவுனியாவில் உள்ள தனியார் விடுதியில் நேற்றுப் பகல் நடைபெற்றது. இந்தக் கூட்டத்திலேயே அடுத்து வரும் தேர்தல்களில் தமிழ் அரசுக் கட்சியுடன் சேர்ந்துகொள்வது என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்அரசுக்கட்சிவடக்குகிழக்கில்தனித்து 8நாடாளுமன்றஉறுப்பினர்களைவென்றுள்ள நிலையில்ரெலோவைஇணைத்துக்கொள்ளாது என்று தலைமைக் குழு உறுப்பினர்கள் பலரும்கூட்டத்தில்வலியுறுத்தினர். கட்சியின் சொந்தச் சின்னமான வெளிச்சவீட்டுச் சின்னத்தில் தனித்துப் போட்டியிடவேண்டும் என்று சில உறுப்பினர்களும் பொதுத் ☞2

# ரெலோ கட்சியிலிருந்து விந்தன் இடைநிறுத்தம்



## 43 வருட கால உறுப்பினர் தூக்கிக் கடாசப்பட்டார்

ரெலோ தலைமைக்குழு உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் கட்சியில் இருந்து தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டார். கட்சித் தலைவருக்கும் பொருளாருக்கும் எதிராக பொதுத்தேர்தல்காலத்தில்அவர்பகிரங்கமாகத் தெரிவித்த குற்றச்சாட்டுக்களுக்கு எதிராக விளக்கம்தருமாறுகோரும்கடிதம்அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

ரெலோ அமைப்பின் தலைமைக் குழுக் கூட்டம் வவுனியா இரண்டாம் குறுக்குத் தெருவில்அமைந்துள்ளதனியார்விருந்தினர் விடுதியில் நேற்று இடம்பெற்றது.

பொதுத் தேர்தலின்போது தனக்கு எதிராகவும் பொருளாளரான சுரேன் குருசாமிக்கு எதிராகவும் பகிரங்க செய்தியாளர்கள் சந்திப்பில் கருதுத்து தெரிவித்தார்என்றுகட்சித்தலைவர்செல்வம் அடைக்கலநாதன் குற்றஞ்சாட்டினார். அதன் அடிப்படையில் அவரைக் கட்சியிலிருந்து இடைநிறுத்த வேண்டும் என்றும் அவர் கோரினார். அவரது குற்றச்சாட்டின் அடிப்படையில் விந்தனைக் கட்சியிலிருந்து இடைநிறுத்துவதுடன் கட்சிப் பொறுப்புக்கள் அனைத்தும் அவரிடமிருந்து பறிக்கப்படுகின்றன என்று தலைமைக் குழு முடிவு செய்வதாக அறிவிக்கப்பட்டது.

இதுதொடர்பானகடிதம்உடனடியாகவே செயலாளரால் எழுதப்பட்டு விந்தனிடம் கொடுக்கப்பட்டதுடன். கட்சியிலிருந்து இடைநிறுத்தப்பட்டதால்தலைமைக் குழுக் கூட்டத்தில் தொடர்ந்தும் கலந்துகொள்ள முடியாது என்று கூறப்பட்டு அவர் கூட்டத்திலிருந்து வெளியேற்றப்பட்டார். மூன்று வார காலத்திற்குள் தன் மீதான குற்றச்சாட்டுக்கள் குறித்து விளக்கம் அளிக்கும்படி ☞2

# மாணவர்கள் பயணித்த படகு கவிழ்ந்ததில் ஒருவர் இறப்பு

## செல்லக்கதிர்காமம் பகுதியில் சம்பவம்

செல்லக்கதிர்காமம் பகுதியில் அக்கரவிஸ்ஸவாவியில்5மாணவர்கள் பயணித்த கட்டுமர படகொன்று கவிழ்ந்துள்ளது. விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். உயிரிழந்தவர் செல்லக் கதிர்காமம் பிரதேசத்தைச் சேர்ந்த 19 வயதுடைய பிரமோத் என்ற மாணவராவார். இந்த விபத்து நேற்று மாலை 5.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இம்முறை உயர்தரத்தில் கல்வி பயிலும் 5 மாணவர்கள் இந்தப் படகில் பயணித்தநிலையில், படகுகவிழ்ந்ததை தொடர்ந்து கிராம மக்கள் உடனடியாக விரைந்து 4 மாணவர்களைக் காப்பாற்றியுள்ளனர்.

உயிரிழந்த மாணவனின் சடலம் கதிர்காமம்மாவட்டவைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

# லஞ்ச ஊழல் ஒழிப்புக்கு உதவ அமெரிக்கா தயார்

## அந்த நாட்டுச் செயலர் உறுதியளிப்பு

தற்போதையஆளும்தரப்பின்லஞ்ச, ஊழல் ஒழிப்பு வேலைத்திட்டத்திற்கு எந்தநேரத்திலும் ஒத்துழைப்பு வழங்குவதற்கும்நாட்டுக்குவெளியில் கொண்டுச்செல்லப்பட்டுள்ளபணத்தை நாட்டுக்கு மீண்டும் கொண்டு வருவதற்கான முயற்சிகளுக்கு தொழில்நுட்பஉதவிகளைவழங்கவும் தயாராகஇருப்பதாகவும்தெற்குமற்றும் மத்திய ஆசிய அலுவல்கள் ☞7

# இது ரகசியம் அல்ல!

பழைய குருடி கதவைத் திறவடி என்கிற கதையாக மீண்டும் தமிழ் அரசுக் கட்சியின் வீட்டுக் கதவைத் தட்டுவது என்று முடிவு செய்திருக்கின்றது ரெலோவின் தலைமைக் குழு. கூட்டமைப்பாகச் செயற்படவேண்டும் என்றால் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்குத்தான் வரவேண்டும், வீட்டுச் சின்னத்தை ஏற்றால்கூட ஜனநாயகக் கூட்டணியின் கட்டமைப்பை ஏற்று தமிழ் ☞2

# அரிசி விலை குறித்து ஜனாதிபதி அறிவுறுத்து

ஒரு கிலோ கிராம் நாட்டரிசியை 225 ரூபா என்ற மொத்த விற்பனை விலைக்கும், 230 ரூபா என்ற சில்லறை விலைக்கும் விற்பனை செய்யுமாறு அரிசிவிற்பனையாளர்களுக்குஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

இது தொடர்பில் அடுத்து வரும் நாட்களில் அவதானம் செலுத்தி, ☞2

# காலநிலை எச்சரிக்கை

கடும் மழை, பலத்த காற்று மற்றும் கடல் கொந்தளிப்புடன் காணப்படும் என்றுவளிமண்டலவியல்திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

நேற்று பிற்பகல் 2 மணிக்கு வெளியிடப்பட்ட அறிவிப்பு இன்று பிற்பகல் 2 மணி வரை செல்லுபடியாகும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தென்கிழக்கு வங்காள விரிகுடாவின் ஆழ்கடல் பகுதியில் பயணிக்கும் பலநாள் மீன்பிடிபடகுகள் மற்றும் கடல்சார் சமூகம் இது தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தென்கிழக்கு வங்காள விரிகுடா கடல் பகுதியில் நேற்று காலை 08.30 ☞2

# மின்சாரக் கட்டணத்தை 40%வரை குறைக்கலாம்

## ஒன்றிணைந்த தொழிற்சங்கம் தெரிவிப்பு

தற்போதுள்ள சூழலில் மின்சாரக் கட்டணங்களை 35 சதவீதம் முதல் 40 சதவீதம் வரையில் குறைக்க முடியும் என்று ஐக்கிய ஒன்றிணைந்த தொழிற்சங்க சம்மேளனம் தெரிவித்துள்ளது.

குறித்த சங்கத்தின் ஊடகப்பேச்சாளர் ஆனந்த பாலித்த தெரிவித்ததாவது:

கடந்த ஜனவரி மாதம் முதல் மின்சாரக் கட்டணத்துக்கான சூத்திரம் தயாரிக்கப்பட்டது. தற்போது ஆறுமாதங்களுக்கு மின்சாரக் கட்டத்திணைக் குறைக்கப்போவதில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மின்சார சபைக்கு பில்லியன் கணக்கான நட்டம் ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் கூறுகின்றார்கள். அப்படி நட்டம் ஏற்பட்டுள்ளமைக்கான பதிவுகள்கணக்கறிக்கையிலோ வேறெங்குமோ இல்லை. சூத்திரத்தின் மூலமாக மின்சாரம், ☞2

# 6 மாதங்களுக்கு மின் கட்டண திருத்தங்கள் எதுவும் இல்லை

## மின்சார சபை முன்மொழிவு

இலங்கை மின்சார சபை (சீஈபி) 6 மாதங்களுக்கு மின்சார கட்டணங்களை மாற்றாது அடுத்த வருட நடுப்பகுதியிலேயே அதில் திருத்தம்செய்யத்தீர்மானித்துள்ளது.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் மின்சார சபை கையளித்த கட்டணத் ☞2

# வாகன இறக்குமதிக்கான நடவடிக்கை ஏதும் இல்லை

## இறக்குமதியாளர் சங்கத் தலைவர் விசனம்

வாகன இறக்குமதிக்கு அனுமதி தருவதாக ஆளும்தரப்பு அறிவித்தபோதும், அது தொடர்பில் எந்தவொரு தீர்மானமும் எடுக்கப்படவில்லை என இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் தலைவர் பிரசாத் மானகே தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாட்டுக்கு வாகனங்களை இறக்குமதி செய்வது தொடர்பில் மக்களும் வாகன இறக்குமதியாளர்களும் மிகுந்த எதிர்பார்ப்புடன் உள்ளனர். வாகன இறக்குமதியில் முதலாம் கட்டத்தின் கீழ் பேருந்து மற்றும் பாரவூர்தி என்பவற்றுக்கான அனுமதி வழங்கப்படும் என ஆளும்தரப்புத் தெரிவித்துள்ளது.

இவ்வாறானபின்னணியில்பலவாகனஇறக்குமதி யாளர்கள் அடுத்த வருடம் முதல் வாகனங்களை இறக்குமதி செய்வது தொடர்பில், அவர்களது முகநூல் மற்றும்இணையத்தளங்கள்ஊடாகவிளம்பரப்படுத்தி வருகின்றனர். இதன் காரணமாக வாகன இறக்குமதி, பேசுபொருளாக மாறியுள்ளது. எனினும் ஆளும்தரப்பு வாகன இறக்குமதிக்கான உரிய தினத்தை இதுவரையிலும் அறிவிக்கவில்லை என்றார்.

# அரசமைப்புச் சபை ஆளும்தரப்பு பிரதிநிதியாக ஆதம்பாவா நியமிப்பு

அரசமைப்பு சபையின் ஆளும்தரப்புப் பிரதிநிதியாக தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அபூபக்கர் அதம்பாவா நியமிக்கப்பட்டுள்ளார். ஜனாதிபதியின் பிரதிநிதி நியமிக்கப்பட்டால் அரசமைப்புச் சபை முழுமைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அரசமைப்புச் சபையில் பதவி நிலை அடிப்படையில் நியமிக்கப்படுகிறார். அவரது பிரதிநிதியாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி.பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார்.

சிறு கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார்.

ஜனாதிபதி தனது பிரதிநிதி ஒருவரை நியமித்ததும் அரசமைப்புச் சபை முழுமை பெறும்.

## இனி இது .....

அரசுவரவேண்டும்என்றெல்லாம்வீராவேசக் கதைகள் பேசிக் கொண்டிருந்த, எகிறி எகிறி துள்ளிக்கொண்டிருந்த ரெலோ தலைவரும், பொருளாரும் நேற்றுக் கூட்டத்தில் அதைப் பற்றியெல்லாம் மூச்சேவிடவில்லை.

பொதுத் தேர்தலுக்கு முன்பே தம்மோடு வந்து இணையும்படி தமிழ் அரசுக் கட்சி இரு கரம் நீட்டி வரவேற்றபோது அதைப் புறக்கணித்துவிட்டு, தேர்தலில் தோற்ற பின்னர் போய் தமிழ் அரசிடம் நின்றால் அவர்கள் எப்படிச் சேர்த்துக்கொள்வார்கள்? தனித்துநின்றுபெருவெற்றியைப்பெற்றுவிட்ட பின்னர் தமிழ் அரசுக் கட்சி ரெலோவைச் சேர்த்துக்கொள்ளும் வாய்ப்பு இல்லை என்று தலைமைக் குழு உறுப்பினர்கள் சிலரே நேரடியாகக் கூட்டத்தில் தெரிவித்தனர். அப்போதும்கூட வெட்கம் ஏதுமின்றி தமிழ் அரசுக் கட்சியுடன் பேசிப் பார்க்கலாம் என்றுதான் தலைவரும் பொருளாளரும் கூறினார்களே தவிர, தேர்தலுக்கு முந்தைய அவர்களின் வீராவேசப் பேச்சுக்கள் எதையும் காணவில்லை.

தமிழ் அரசுக் கட்சியைவிட்டால் தம்மால் இப்போதைக்கு தேர்தலில் வெற்றிபெற முடியாது என்பதே அவர்களின் நேற்றைய கூட்டத்தின் சாராம்சமாக இருந்தது.

நேற்றுப் பகல் 11 மணிக்கு வவுனியா நெல்லி ஸ்டார் ஹோட்டலில் கூட்டம் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. 12 மணிக்குத்தான் தொடங்கினார்கள். இந்தக் கூட்டத்திற்கு தலைமைக் குழு உறுப்பினர்களான விந்தன் மற்றும் வினோ நோகராதலிங்கம் ஆகியோருக்கு செயலாளர் ஜனா எனப்படும் கருணாகரம் அழைப்பு அனுப்பவில்லை. இருந்தாலும் ஏனைய உறுப்பினர்கள் கூட்ட விவரத்தை அவர்களுடன் பகிர்ந்துகொண்டதுடன் அவர்களையும் கூட்டத்திற்குக் கட்டாயம் வருமாறு அழைத்திருந்தனர். அவர்களுக்கு எதிராக முடிவெடுப்பதற்காகவே இந்தக் கூட்டத்தைக் கூட்டுகிறார்கள் என்பது தெரிந்திருந்த காரணத்தாலேயே அவர்கள் அப்படி அழைத்திருந்தார்கள்.

அவர்களின் அழைப்பை ஏற்று கூட்டத்தில் கலந்துகொள்வதற்கு அவர்களும் இணைக்கம் தெரிவித்திருந்தார்கள். இதை அறிந்ததும் ரெலோவின் வவுனியா அலுவலகத்தில் நடைபெறுவதாக இருந்த கூட்டம் நெல்லி ஸ்ரார் ஹோட்டலுக்கு மாற்றப்பட்டது. இருந்தாலும் அவர்கள் இருவரும் அங்கு கூட்டத்திற்குச் சென்றிருந்தார்கள். அவர்களை கூட்டத்திற்குள் அனுமதிக்க மறுத்தால் அது மிகப் பெரும் பிரச்சினையாக வெடிக்கும் என்று கருதி அவர்களைக் கூட்டத்திற்குள் அனுமதித்தார்கள்.

நேற்றைய கூட்ட நிகழ்ச்சி நிரல் குறித்து செயலாளர் அறிவித்தார். உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ் அரசுக் கட்சியுடன் சேர்ந்து கொள்வது குறித்தும், விந்தன் கனகரட்ணத்தை கட்சியிலிருந்து நிறுத்துவது குறித்தும் நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்டிருந்தது.

கூட்டத்தில் முதல் விடயமாக உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ் அரசுக் கட்சியுடன் சேர்ந்துபோட்டியிடுவது குறித்து ஆராயப்பட்டது. கூட்டத்தில் இருந்த சிலர் அந்த யோசனை அபத்தமானது என்பதை எடுத்து விளக்கினர். அதுநேரம் ரெலோவுக்கு வேறு வழியோதும் இல்லை என்பதையும் ஏற்றுக்கொண்டனர்.

நாம் தோற்றுப்போன நிலையில் சிறுமைப்பட்டு வெங்கங்கெட்டு எப்படி தமிழ் அரசுக் கட்சியிடம் செல்வது? இது அவர்களின் கேள்வியாக இருந்தது. அவர்கள் (வீடு) எப்படியும் ஏற்றுக்கொள்ளாது என்றாலும் பேசிப் பார்க்கலாம் என்றார்கள்.

ரெலோ சின்னமான வெளிச்சவீட்டில் தனித்து நின்று கேட்போம் என்பது சிலரின் யோசனையாக இருந்தது. அப்படிக் கேட்டால் தாமும் தேர்தலில் போட்டியிடத் தயார் என்றார்கள் அவர்கள்.

பொ-துத் தேர்தலில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் சார்பில் சங்கில் கேட்டதால் அது மக்கள் மனதில் நன்கு பதிந்துள்ளது. எனவே அதிலேயே கேட்கலாம் என்றார்கள் சிலர். அப்படிக் கேட்டால் வெற்றிபெற முடியாது, ஒரு பிரதேச சபையைக்கூடக் கைப்பற்ற முடியாது என்பதையும் அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள்.

இப்படிப் பலரும் பலதையும் கூறினாலும் கட்சித் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், செயலாளர் ஜனா கருணாகரம், பொருளாளர் சுரேன் குருசாமி ஆகியோர் தமிழ் அரசுக் கட்சியுடன் மீண்டும் போய்ச் சேர்வதிலேயே ஆர்வம் காட்டினார்கள். வெளிச்சவீட்டுச் சின்னம் தமிழ் மக்களுக்குத் தெரியாத ஒன்று என்றார்கள். சங்கில் கேட்பதால் வெற்றி சாத்தியமில்லை என்றார்கள். இப்படியே மற்றைய யோசனைகள் எல்லாவற்றையும் தட்டிக் கழித்துக்கொண்டிருந்தார்கள்.

இறுதியில் தமிழ் அரசுக் கட்சியுடன் பேசிப் பார்ப்பது அவர்கள் ஏற்றுக்கொள்ளாமல் உதைத்துத் தள்ளினால் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியுடன் இப்போதுள்ளதைப் போன்றே சேர்ந்து பயணிப்பது என்று முடிவெடுத்தார்கள்.

இதைத் தொடர்ந்து கட்சியின் உள்வீட்டு விவகாரம் பக்கம் பேச்சுத் திரும்பியது. அதைத் தொடக்கி வைத்தவர் தலைவர் செல்வம் அடைக்கலநாதன்தான். கடும் காரசாரங்களுடனும் விவாதங்களுடனும் அடிக்கப் பாய்ந்த சம்பவங்களுடனும் நடந்த கூட்டத்தின் இந்தப் பகுதி குறித்து விலாவரியாக நாளை சொல்கின்றேன். விந்தனுக்கு எதிரான சதி வலை எப்படிக் கட்டவிழ்ந்தது என்பதையும் விளக்குகின்றேன்.

ஒரேயொரு கொசுறு விடயத்தை மட்டும் இன்றே சொல்லிவிடுகின்றேன். காலைக் கதிருக்கும் தமிழ் பக்கத்திற்கும் கட்சியின் உள்வீட்டு தகவல்களைக் கொடுக்கும் ரிப்போட்டர் விந்தன்தான் என்றும் கூட்டத்தில் சொல்லப்பட்டது. ஆயுதப் போராட்டக் களத்தில் ரெலோ ஏன் சோபிக்கவில்லை என்பது இப்போது புரிகிறது. இப்படிப் புலனாய்வு தகவல்களைத் திரட்டினால் எப்படி 'காம்ப்' அடிக்க முடியும். உட்கார்ந்து 'மிக்சர்' சாப்பிடத்தான் லாயக்காக இருக்கும்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## தமிழ் அரசுக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தலில் போட்டியிட்டது போன்றே சங்குச் சின்னத்தில் போட்டியிடவேண்டும் என்று வேறு சிலரும் வலியுறுத்தினர்.

இருப்பினும் கட்சியின் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோர் தமிழ் அரசுக் கட்சியுடன் மீண்டும் சேர்வதிலேயே குறியாக இருந்தனர் என்பதால் பெரும்பான்மை என்ற அடிப்படையில் தமிழ் அரசுக் கட்சியுடன் இது குறித்துப் பேசுவது என்று முடிவெடுக்கப்பட்டது. தமிழ் அரசுக் கட்சி தம்மைச் சேர்த்துக்கொள்ளாவிட்டால் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் தொடர்ந்தும் பயணிப்பது என்றும் முடிவெடுக்கப்பட்டது.

தலைமைக் குழுக் கூட்டத்தின் முடிவு குறித்து கட்சியின் பேச்சாளர் சுரேன் குருசாமி செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

கடந்த தேர்தலில் நாங்கள் பெற்றுக்கொண்ட பெறுபேறுகள், அதில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் தொடர்பாகப் பேசியிருக்கின்றோம். குறிப்பாக எதிர்காலத்தில் நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து தமிழ்த் தேசியத்தைப் பாதுகாக்கும் முகமாகத் தமிழ்த் தரப்பில் இருக்கக்கூடிய அனைவரும் ஒருமித்துப் பயணிப்பது தொடர்பான விடயங்கள் கலந்தாலோசிக்கப்பட்டன.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தென்னிலங்கையின் அலை பெரிதாக வீசப்பட்டு எமது இளைஞர்கள் அள்ளுண்டு போனதை நாங்கள் அவதானித்திருக்கின்றோம். தமிழ்த் தேசியத்தை வலியுறுத்துகின்ற வாக்குகள் கணிசமான அளவு வழங்கப்பட்டிருந்தாலும் எங்களது கட்சிகளுக்கிடையில் இருந்த பிரிவினைகள் தென்னிலங்கைக் கட்சிக்கு வாய்ப்பாக அமைந்துள்ளது. அது அந்தக் கட்சிக்கு அதிக ஆசனங்களைப் பெறுவதற்கு வழிவகுத்துள்ளது.

ஆகவே, பிரிவினையுடன் பயணிப்பது எமது இனத்தினுடைய இருப்புக்கும் எதிர்காலத் தமிழ்த் தேசிய அரசியலுக்கும் பாதகமான சூழலை ஏற்படுத்தும். அதனை இந்தத் தேர்தல் முடிவுகளின் மூலம் உணர்ந்துள்ளோம். இதனைச் சீர்செய்து கொண்டு தமிழ்த் தேசியப் பரப்பிலே பயணிக்கின்ற அனைவரையும் ஒன்றிணைத்துக்கொண்டு பயணிப்பது பற்றி கலந்துரையாடி இருக்கின்றோம்.

இது தொடர்பாக மாவட்ட ரீதியாகவும் எமது கட்சி உறுப்பினர்களோடு பேசுவதற்குத் தீர்மானித்துள்ளோம். இன்னும் பலமான வகையில் மீள்கட்டுமானத்தைச் செய்து எமது அரசியலை முன்னெடுக்கத் தயாராகவுள்ளோம்.

அத்துடன் கட்சிக்குள் நடந்த பிரச்சினைகள் தொடர்பாக மாவட்ட ரீதியாகவும் கூட்டங்களை நடத்தி அவற்றை ஆராய்வதாகத் தீர்மானித்துள்ளோம் - என்றார்.

## 6 மாதங்க ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருத்த முன்மொழிவில் இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

மின்சார சபை பொது முகாமையாளர் கொமெஸ்டர்கையொப்பமிட்ட முன்மொழிவில், மதிப்பிடப்பட்ட அளவைப் பராமரிப்பதன் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு தற்போதைய கட்டண மட்டங்களை அடுத்த 6 மாதங்களுக்குத் தொடர்வது என்று முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'2025 ஆம் ஆண்டில் 1.02 சதவிகிதம் கட்டணக் குறைப்புக்கு உத்தரவாதம் அளிக்கும் வகையில் 2,334 மில்லியன் ரூபாய் உபரியாக மதிப்பிடப்பட்டுள்ளது. மதிப்பீட்டின் எந்த மாறுபாடும் அதிகமாகவோ அல்லது பற்றாக்குறையாகவோ இருந்தாலும், மொத்த விநியோக பரிவர்த்தனை கணக்கிற்கு (யறீவீபு) கணக்கிடப்பட்டு அடுத்த கட்டணத் திருத்தத்தில் பரிசீலிக்கப்படும். மின்சார விநியோகத்தின் நம்பகத்தன்மைக்கு அச்சுறுத்தலான சாத்தியமான அபாயங்களைத் தவிர்க்கும் அதேவேளையில் நிதி மற்றும் செயல்பாட்டு உறுதிப்பாட்டைத் தக்கவைக்கும் வகையில, 2025 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களுக்கு கட்டணங்களை மாற்றுவதில்லை என்பதே மின்சார சபையின் நிலைப்பாடு' என்று கூறப்பட்டுள்ளது.

மின்கட்டணம் சம்பந்தமாக இலங்கை மின்சாரசபை முன்வைத்துள்ள இந்த யோசனையை ஆராய்ந்து நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இலங்கை மின்சாரசஷ்பானது தனது மின்கட்டண யோசனையை முன்வைத்துள்ளது. அது சம்பந்தமாக நாம் ஆராய்ந்து நடவடிக்கைகளை எடுக்கவுள்ளோம். அதன் பின்னர் பொதுமக்களின் கருத்துக்களை கேட்டறியவுள்ளோம் என்று பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் சந்தலால் தெரிவித்தார்.

## அரிசி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த விலையைப் பின்பற்றாத அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்குமாறு நுகர்வோர் விவகார அதிகார சபைக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

வர்த்தக, வாணிப, உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் அதிகாரிகள் மற்றும் அரிசி விற்பனையாளர்களுடன் நேற்று இடம்பெற்ற சந்திப்பில் ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார் என்று அவரது ஊடகப் பிரிவு தெரிவித்தது.

அத்துடன், ஒரு கிலோ கிராம் வெள்ளை பச்சரிசியை 215 ரூபா என்ற மொத்த விற்பனை விலையிலும், 220 ரூபா என்ற சில்லறை விற்பனை விலையிலும், விற்பனை செய்யுமாறும் ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார்.

அதேநேரம், இறக்குமதி செய்யப்படும் நாட்டரிசியை 220 ரூபாவுக்கும், சம்பா அரிசி கிலோ கிராம் ஒன்றை மொத்த விற்பனையில் 235 ரூபாவுக்கும், சில்லறை விற்பனையில் 240 ரூபாவுக்கும், கீரி சம்பா கிலோ கிராம் ஒன்றை மொத்த விற்பனையில் 255 ரூபாவுக்கும், சில்லறை விற்பனையில் 260 ரூபாவுக்கும் விற்பனை செய்யுமாறும் ஜனாதிபதி அநுகுமார திசாநாயக்க அறிவுறுத்தியுள்ளார் என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

## மின்சாரக் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எரிபொருளை வழங்கும் முறைமை வேறெங்கும் இல்லை. இந்த முறைமையால் எரிபொருள் மற்றும் மின்சாரத்தினை நியாயமான முறையில் விநியோகிக்க முடியாத நிலைமையே காணப்படுகின்றது.

2012ஆம் ஆண்டிலிருந்து எவ்விதமான கட்டுப்பாடுகளுமின்றி செயற்பட்டு வரும் இலங்கை மின்சார சபையின் அதிகாரிகளின் போனஸ் மற்றும் சம்பளம் ஆகியன 300 சதவீதத்துக்கும் அதிகமாக உயர்ந்துள்ளது - என்றார்.

## காலநிலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மணியளவில் குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் உருவாகியுள்ளது. இது அடுத்த 24 மணி நேரத்தில் மேற்கு-வடமேற்கு நோக்கி நகர்ந்து மேலும் வளர்ச்சியடைய வாய்ப்புள்ளது.

இது டிசம்பர் 11 ஆம் திகதி இலங்கை மற்றும் தமிழ்நாட்டிற்கு அப்பால் தென்மேற்கு வங்கக்கடலை அடைய அதிக வாய்ப்புள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக மேற்படி கடற்பரப்புகளில் தற்காலிகமாக மிக பலத்த காற்றுடன் (மணிக்கு 60 கிலோ மீற்றர்) பலத்த மழை பெய்யக்கூடும் என்பதுடன் கடற்பரப்புகள் மிகவும் கொந்தளிப்பாகவும் காணப்படும்.

## ரெலோ ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சி அவரிடம் கேட்டுள்ளது.

கடந்த சில மாதங்களாகவே விந்தனைக் கட்சியிலிருந்து நீக்க ரெலோவின் தலைமைக்குழுவின் முக்கிய உறுப்பினர்கள் தீவிரமாகச் செயற்பட்டு வந்தனர். கட்சியின் தலைவர், செயலாளர், பொருளார் ஆகியோரின் கடந்தகாலச் செயற்பாடுகள் தொடர்பாகப் பகிரங்கமாக குற்றச்சாட்டுக்களை முன்வைத்ததைத் தொடர்ந்தே அவரைக் கட்சியிலிருந்து வெளியேற்றுவதில் அவர்கள் தீவிரமாக இருந்தனர்.

2024 பொதுத் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் இருந்து போட்டியிடுவதற்காக விந்தனைக் கட்சியின் பொதுக் குழு தேர்ந்தெடுத்திருந்தபோதும் அவருக்கு அந்த வாய்ப்பை வழங்காமல் துரோகம் இழைக்கப்பட்டதைத் தொடர்ந்தே கட்சியின் தலைவர்களின் செயற்பாடுகள் தொடர்பில் செய்தியாளர் சந்திப்பில் விந்தன் கேள்வி எழுப்பியிருந்தார்.

இதையடுத்தே அவரைக் கட்சியிலிருந்து நீக்கவேண்டும் என்று கட்சியின் பொருளார் மற்றும் தலைவர் ஆகியோர் மும்முரமாகச் செயற்பட்டு வந்தனர். இது குறித்து விவாதிக்க கட்சியின் மத்திய குழுவைக் கூட்டும்படி விந்தன் செயலாளருக்கு கடிதம் எழுதியிருந்தார். அ-துபோலவே முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் உட்படப் பலரும் கட்சியின் செயலாளருக்கு பொதுக் குழு அல்லது மத்திய குழுவை உடனடியாகக் கூட்டும்படி கடிதம் எழுதியிருந்தனர். ஆனால் அவற்றைக் கூட்ட மறுத்த தலைவர்கள் தமக்குப் பெரும்பான்மை இருக்கக்கூடிய தலைமைக் குழுவைக் கூட்டி விந்தனைக் கட்சியிலிருந்து இடைநிறுத்தியுள்ளார்கள் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

இதேவேளை, கட்சியின் தீர்மானத்தை மீறி கடந்த ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவு அளித்தமைக்காக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கத்திடம் விளக்கம் கோரி கடிதம் அனுப்புவது என்றும் தலைமைகுழு தீர்மானித்துள்ளது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் யாழ் தேர்தல் மாவட்டத்தில் ரெலோ சார்பில் வேட்பாளரைப் பெயரிடும் விடயத்தில் கட்சியின் பொதுக் குழுக் கூட்டத் தீர்மானத்துக்கு மாறாக விந்தனின் பெயரை நீக்கியது தொடர்பாக கட்சியின் பொருளாளர் சுரேன் குருசாமி மற்றும் கட்சியின் தலைமைக் குழு உறுப்பினர் சபா குகதாஸ் ஆகியோரிடம் விளக்கம் கோரிக் கடிதம் அனுப்பவுள்ளதாகவும் தலைமைக்குழு தீர்மானித்துள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# சுவிஸ் இராஜாங்கத் துணைச் செயலாளர் அயலுறவுத்துறை அமைச்சருடன் சந்திப்பு

## சிவில் அமைப்பின் பிரதிநிதிகளுடனும் கலந்தாய்வு

சுவிஸ்ஸர்லாந்தின் வெளிவிவகாரங்களுக்கான பெடரல் திணைக்களத்தின் சமாதானம், மற்றும் மனித உரிமைகள் பிரிவுக்கான இராஜாங்கதுணைச்செயலாளர் டிம் எண்டர்லின் ஐந்து நாள்கள் விஜயம் மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்துள்ளார்.

அவர், முதலில் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்தைச் சந்தித்து உரையாடியுள்ளார். இதன்போது, உள்நாட்டில் சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தை முன்னெடுத்துச் செல்வது தொடர்பில் ஆரோக்கியமான கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இதனைத்தொடர்ந்து கொழும்பில் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து உரையாடியுள்ளார்.

இதன்போது அரசாங்கம், சமாதானத்தைக் கட்டியெழுப்புதல், நல்லிணக்கத்தை உருவாக்குதல் மற்றும் பொறுப்புக்கூறல் விடயத்தில் உள்ளகப் பொறிமுறைகளை முன்னெடுப்பதற்கு சாதகமான சமிக்ஞைகளை வெளிப்படுத்தியுள்ள நிலையில் அவ்விடயங்களை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்வதன் அவசியம் பற்றி சிவில் அமைப்பின் பிரதிநிதிகள் எடுத்துரைத்துள்ளனர்.

அத்துடன், தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் அரசாங்கம் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஏற்கனவே புதிய அரசமைப்புக்காக தயாரிக்கப்பட்டுள்ள இடைக்கால அறிக்கையில் இருந்து அடுத்தகட்டமாக முன்னெடுப்பதாக அறிவித்துள்ளபோதும் ஆட்சிப்





பொறுப்பேற்கப்பட்டுள்ளதன் பின்னர் அரசாங்கத்தின்பிரதானகட்சியின்வெளிப்பாடு மாகாணசபை முறைமை நீக்குதல் உள்ளிட்ட வகையில் அமைந்திருக்கின்றது.

ஆகவே முரண்பாடான கருத்துக்களை தவிர்க்கும் வகையில் அரசாங்கத்துடன் தொடர்ச்சியான கலந்துரையாடல்கள் அவசியம் என்றும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

ஆகவே இந்த விடயங்கள் தொடர்பில் எதிர்காலத்தில் வினைத்திறனாகச் செயற்படுவதற்கு சுவிஸ்ஸர்லாந்தின் ஒத்துழைப்பு அவசியம் என்பதும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் வதிவிடப்பிரதிநிதி மார்க் அண்ட்ரூ பிரெஞ்சையும் சந்தித்து இராஜாங்க துணைச் செயலாளர் டிம் எண்டர்லின் கலந்துரையாடியுள்ளார்.

# குளவி கொட்டுக்கு இலக்காகி 6 பேர் வைத்தியசாலையில்

## அநுராதபுரத்தில் சம்பவம்

அநுராதபுரம், டி.எஸ் சேனாநாயக்க மாவத்தை பகுதியில் குளவி கொட்டுக்கு இலக்காகி ஆறு பேர் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என அநுராதபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

அநுராதபுரம் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் வசிக்கும் 30 முதல் 70 வயதுக் குட்பட்டவர்களே வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். டி.எஸ் சேனாநாயக்க மாவத்தை பகுதியில் அமைந்துள்ள பூங்கா ஒன்றில் உள்ள மரமொன்றிலிருந்த குளவி கூடு ஒன்று கலைந்ததால் இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# வட்ஸ்அப் ஊடாக ஹெரோயின் போதைப்பொருள் விற்பனை

## முன்னாள் இராணுவ சிப்பாய் கைது



பண்டாரவளை நகரில் வட்ஸ்அப் ஊடாக ஹெரோயின் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட அங்கவீனமுற்ற முன்னாள் இராணுவ சிப்பாய் ஒருவர் சுமார் 30 லட்சம் ரூபா பெறுமதியான சிறிய பக்கட்களை கொண்ட 320 ஹெரோயின் போதைப்பொருள் பக்கட்களுடன் கைது செய்யப்பட்டார் என பண்டாரவளை பொலிஸ் நிலையத்தின் குற்றப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

பண்டாரவளை பெரேரா மாவத்தையில் தற்காலிகமாக வாடகை வீட்டில் தங்கியுள்ள வெலிமடை அம்பகஸ்தோவ பிரதேசத்தைச் சேர்ந்த 40 வயதுடைய அங்கவீனமுற்ற முன்னாள் இராணுவ சிப்பாயே கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பண்டாரவளை நகரிலுள்ள இந்த வாடகை வீட்டில் பண்டாரவளை பொலிஸ் நிலையத்தின் குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் சோதனை நடத்தியதுடன், சந்தேக நபர் ஹெரோயினை சிறிய பக்கட்களில் பொதி செய்து கொள்வனவு செய்பவர்களுக்கு விற்பனை செய்துகொண்டிருந்ததார் எனவும், அதன்போதே கைது செய்யப்பட்டார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

வெளிநாட்டில் உள்ள பிரதான போதைப்பொருள் வியாபாரி ஒருவர் இந்த போதைப்பொருள் வர்த்தகத்தை முன்னெடுத்துச் செல்வதாக பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

# கொரியாவுக்கு தொழிலுக்கு அனுப்பும் ஈ – 8 விசா சட்ட ரீதியிலானது அல்ல

## அமைச்சர் விஜித்த ஹேரத் தெரிவிப்பு

கொரியாவுக்குத் தற்காலிகமாக தொழிலுக்கு அனுப்பும் ஈ - 8 விசா எந்தவகையிலும் சட்ட ரீதியிலானது அல்ல. அது தொடர்பான ஒப்பந்தத்துக்கு அமைச்சரவையின் அனுமதியும் பெற்றுக்கொள்ளப்படவில்லை என அமைச்சர் விஜித்த ஹேரத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை அரசாங்கத்தால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால வாக்குப்பதிவு கணக்கறிக்கை மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் -

ஈ - 8 விசா என்பது தென்கொரியாவுக்கு விவசாயம் மற்றும் கடற்றொழிலுக்காக தற்காலிகமாக இலங்கையர்களை அனுப்புவதற்கான ஒப்பந்தம். அந்த ஒப்பந்தம் எந்தவகையிலும் சட்ட ரீதியிலான ஒப்பந்தம் அல்ல. இலங்கை தென்கொரியுடன் அல்லது வேறு நாட்டுடன் வெளிநாட்டு தொழில் தொடர்பில் ஒப்பந்தம் கைச்சாத்திடுவதென்றால் இலங்கையில் எமது அமைச்சரவையில் அதற்கு பூரண அனுமதியை பெற்றுக்கொள்ள வேண்டும். என்றாலும் முன்னாள் தொழில் அமைச்சர் கொரியாவின் ஒரு மாநிலத்துடன் தனிப்பட்ட முறையில் ஒப்பந்தம் கைச்சாத்திட்டுள்ளார். அதன் பிரதி ஒன்றுகூட வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் இல்லை.

ஆனால் அந்த ஒப்பந்தம் தனியார் முகவர் நிறுவனங்களிடம் இருக்கின்றன. ஆனால் அது எந்தவகையிலும் சட்ட பூர்வமானதல்ல.

ஆனால் பொறுப்புவாய்ந்த அமைச்சர் என்றவகையில், கைச்சாத்திட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அமைச்சரவைக்கு சமர்ப்பித்து அனுமதியை பெற்றுக்கொண்டு, வெளிவிகார அமைச்சில் அனுமதியை பெற்றுக்கொண்டு, கொரியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டிருக்கலாம். அவ்வாறு எதுவும் இடம்பெறவில்லை.

இதனால் அப்பாவி இளைஞர் யுவதிகள் இதன் உண்மைத்தன்மை தெரியாமல் வெளிநாட்டு முகவர் நிறுவனங்களில் பதிவு செய்து கொரியாவுக்கு செல்ல விண்ணப்பித்திருந்தனர். அதற்கு கொரி தூதரகத்தால் விசா வழங்கி இருந்தது. கொரிவுக்கு இதில் எந்த பிரச்சினை இல்லை.

ஏனெனில் அவர்களின் சட்டத்துக்கமைய மாநிலம் ஒன்றுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொள்ள முடியும். எமது நாட்டின் சட்டத்தின் பிரகாரம் அவ்வாறு முடியாது. மாகாணசபைக்கு அவ்வாறு தனியான ஒப்பந்தம் கைச்சாத்திட முடியாது. மத்திய அரசாங்கத்துக்கே அந்த அதிகாரம் இருக்கிறது. அதனால் இந்த சட்டத்துக்கு முரணான ஈ - 8 விசாவால் அதிகமானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதனால் இந்த முறைமையை நாங்கள் சட்ட ரீதியிலாக்குவதற்கு நடவடிக்கை எடுப்போம் என்பதை மக்களுக்கு தெரிவிக்கிறோம். ஈ-8 விசாவை சட்ட ரீதியிலாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை தற்போது நாங்கள் மேற்கொண்டு வருகிறோம். - என்றார்.

# சபாநாயகர் ஒரு பட்டதாரிதான் என்பதை நிரூபிக்கவேண்டும்

## மஹிந்த தேசப்பிரிய சவால்



சபாநாயகர் அசோகரன்வல, தான் பட்டதாரி என்பதை நிரூபிக்கவேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரிய வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சபாநாயகரால் தான் பட்டதாரி என்பதை நிரூபிக்க முடியாவிட்டால் அவர் தனது பதவியை இராஜினாமா செய்யவேண்டும் என தெரிவித்துள்ள மஹிந்ததேசப்பிரிய, தேசிய மக்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மக்களுக்கு உதவுங்கள்

இலங்கை மின்சார சபை 2025ஆம் ஆண்டின் முதல் 6 மாதங்களுக்கு மின்சார கட்டணங்களில் மாற்றம் செய்யாது என்று அறிவித்துள்ளது. பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிற்கு இந்த விடயம் சபையால் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. முதலில் ஒரு சதவீதக் கட்டணக் குறைப்புக்கு இணங்கியிருந்த சபை அதை மீளாய்வு செய்து கட்டணக் குறைப்பு வீதத்தை அதிகரிக்கும்படி கேட்டதன் பின்னர் அடுத்த 6 மாதங்களுக்குக் கட்டணக் குறைப்பே இல்லை என்று பதிலளித்திருக்கின்றது. இது ஏமாற்றம் மட்டுமல்ல, கடும் கண்டனத்துக்குமுரியது.

பொதுப்பயன்பாடுகள்ஆணைக்குழுவிடம்மின்சாரசபைகையளித்த கட்டணத் திருத்த முன்மொழிவில் கட்டண மீளாய்வு அடுத்த வருடம் நடுப்பகுதியிலேயே மேற்கொள்ளப்படும் என்று மின்சார சபை பொது முகாமையாளர் கொமெஸ்டர் தெரிவித்துள்ளார். மதிப்பிடப்பட்ட அளவைப் பராமரிப்பதன் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு தற்போதைய கட்டண மட்டங்களை அடுத்த 6 மாதங்களுக்குத் தொடர்வது என்று முடிவு எடுக்கப்பட்டதாகத் அவர் தெரிவித்துள்ளார்.

2025 முதல் அரையாண்டில் மின்சார சபையின் வருமானம் 1.02 சதவீதம் உபரியாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டிருக்கின்றது. அதன் பெறுமதி 2 ஆயிரத்து 334 மில்லியன் ரூபாய். முதலில் இதனைத்தான் கட்டணக் குறைப்பாக மக்களுக்கு வழங்க மின்சார சபை முன்வந்தது. ஆனால் இப்போது அந்தப் பணத்தையும் 2025இன் இரண்டாம் அரையாண்டுடன் சேர்த்து கட்டண மீளாய்வு செய்யப்படும் என்று அறிவித்துள்ளது. மின்சார விநியோகத்தின் நம்பகத்தன்மைக்கு அச்சுறுத்தலான சாத்தியமான அபாயங்களைத் தவிர்க்கும் அதேவேளையில் நிதி மற்றும் செயல்பாட்டு உறுதிப்பாட்டைத் தக்கவைக்கும் வகையில, இந்த முடிவு எடுக்கப்பட்டிருப்பதாக மின்சார சபை தெரிவிக்கின்றது. இதற்கு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு உடனடியாக எந்த எதிர்வினையையும் காட்டவில்லை.

மின்கட்டணம்சம்பந்தமாகஇலங்கைமின்சாரசபைமுன்வைத்துள்ள இந்த யோசனையை ஆராய்ந்து நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இலங்கை மின்சாரசஷ்பானது தனது மின்கட்டண யோசனையை முன்வைத்துள்ளது. அதுசம்பந்தமாகநாம்ஆராய்ந்துநடவடிக்கைகளை எடுக்கவுள்ளோம். அதன்பின்னர் பொதுமக்களின் கருத்துக்களை கேட்டறியவுள்ளோம் என்று பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் சந்தலால் தெரிவித்தார்.

ஆனால், மின்சாரக் கட்டணங்களை 35 சதவீதம் முதல் 40 சதவீதம் வரையில் குறைக்க முடியும் என்று ஐக்கிய ஒன்றிணைந்த தொழிற்சங்க சம்மேளனம் தெரிவித்துள்ளது.

”மின்சார சபைக்கு பில்லியன் கணக்கான நட்டம் ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் கூறுகின்றார்கள். அப்படி நட்டம் ஏற்பட்டுள்ளமைக்கான பதிவுகள் கணக்கறிக்கையிலோ வேறெங்குமோ இல்லை. சூத்திரத்தின் மூலமாக மின்சாரம், எரிபொருளை வழங்கும் முறைமை வேறெங்கும் இல்லை. இந்த முறைமையால் எரிபொருள் மற்றும் மின்சாரத்தினை நியாயமான முறையில் விநியோகிக்க முடியாத நிலைமையே காணப்படுகின்றது.

2012ஆம் ஆண்டிலிருந்து எவ்விதமான கட்டுப்பாடுகளுமின்றி செயற்பட்டு வரும் இலங்கை மின்சார சபையின் அதிகாரிகளின் போனஸ் மற்றும் சம்பளம் ஆகியன 300 சதவீதத்துக்கும் அதிகமாக உயர்ந்துள்ளது” என்று சங்கத்தின் ஊடகப்பேச்சாளர் ஆனந்த பாலித்த தெரிவித்துள்ளார்.

அதேநேரம் கடந்த 6 மாத காலப் பகுதியில் மட்டும் மின்சார சபைக்கு 200 மில்லியன் ரூபாய் இலாபம் கிட்டியுள்ளதாக மின்சார பாவனையாளர்கள் சங்கம் தெரிவிக்கிறது.

”நாங்கள் இலங்கை மின்சார சபையின் நிதிவிடயங்களை கடந்த வருடத்தின் இதேகாலத்தை ஒப்பீடு செய்து பார்கின்றபோது இலங்கை மின்சார சபைக்கு 200 மில்லியன் இலாபம் கிடைத்துள்ளது. அவ்வாறு இலாபம் ஈட்டப்பட்டுள்ள நிலையில் அதில் ஒரு சதவீத்தினை மட்டும் மக்களுக்கு வழங்கிவிட்டு எஞ்சியதை ஊழியர்களும், அதிகாரிகளும் தமதாக்கிக் கொள்வதற்கு முனைகின்றீர்களா?” என்று கேள்வி எழுப்பியுள்ளார் அச்சங்கத்தின் தேசிய அமைப்பாளர் சஞ்சீவ தம்மிக்க.

பொருளாதாரநெருக்கடியால்அதிகம்பாதிக்கப்பட்டுள்ளமக்களுக்கு அதிலிருந்து விடுதலை கிடைக்கும் என்ற உறுதிமொழியுடன் ஆட்சிக்கு வந்த தேசிய மக்கள் சக்தியின் காலத்தில் மின்சார சபையின் இதுபோன்ற விடாப்பிடியான நிலை ஆச்சரியத்தையும் விசனத்தையும் ஏற்படுத்துகின்றது. மின்சார சபையை ஒன்றில் நட்டத்தில் இயங்க வைப்பது அல்லது அதிக இலாபம் கொழிக்கும் நிறுவனமாக்குவதுஎன்கிறபழையஆட்சிமுறையில்வெறுப்புக்கொண்டு, மக்கள் நல ஆட்சியை ஏற்படுத்தும் நோக்கத்துடன்தான் மக்கள் அநுர தலைமையிலான ஆட்சிக்குப் பேராதரவு கொடுத்தார்கள். அப்படியிருந்தும் எரிபொருள் மற்றும் மின்சாரக் கட்டணங்கள் குறைய மறப்பது பெரும் ஏமாற்றம். ஆளும் தரப்பு இது விடயத்தில் துரித நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியம். பொருளாதார நெருக்கடியிலிருந்து மக்களுக்கு விடுதலை அவசியம்.

# மருத்துவத்துக்கே வைத்தியம் பார்க்கும் ட்ரம்

எம். பாண்டியராஜன்



2025ஆம் ஆண்டிலிருந்து அடுத்த நான்கு ஆண்டுகளுக்கு அமெரிக்காவை ஆளப் போகிறவர்களின் பட்டியலில் ஒவ்வொருவராக அறிவித்துக்கொண்டிருக்கிறார் அதிபர் (தேர்வு) டொனால்ட் டிரம்ப்.

டிரம்ப்அரசில்நலவாழ்வுமற்றும்மக்கள்சேவைத் துறைக்குப் பொறுப்பாக அறிவிக்கப்பட்டுள்ள ராபர்ட் எஃப் கென்னடி ஜூனியர் பெயர்தான், இன்னமும் சொந்தக் கட்சிக்காரர்களான குடியரசுக் கட்சியினரை அதிர்ச்சியிலும்தோல்வியுற்றஜனநாயகக்கட்சியினரை வியப்பிலும் ஆழ்த்திக் கொண்டிருக்கிறது.

டொனால்ட் டிரம்பின் இந்த அறிவிப்பால் பெரிதும் திகைத்துப் போயிருப்பது உள்ளபடியே அமெரிக்காவிலுள்ளபெருநிறுவனங்களானமருந்துகள் தயாரிப்பாளர்களும்தயாரிப்புநிறுவனங்களும்தான்.

பொதுவாக, அமெரிக்க அரசையும் அரசியலையும் ஆட்டிப் படைப்பவை எப்போதுமே ராணுவ தளவாடங்கள் தயாரிப்பு நிறுவனங்கள், மருந்துகள் தயாரிப்பு நிறுவனங்கள் மற்றும் காப்பீட்டுத் துறை நிறுவனங்கள்தான் என்பார்கள். ஏனென்றால் அவ்வளவும் பணம். உலகில் போரையும் சரி, நோயையும் சரி, தொடங்குவதும் நிறுத்துவதும் இவர்கள்தான் (வியாபாரத்துக்காக) என்ற விமர்சனங்களும் இருக்கின்றன.

உலகம் முழுவதும் பரவி ஒட்டுமொத்த மக்களையும் முடக்கிப்போட்ட கொரோனா (கோவிட்) தோன்றியதற்கும் பரவியதற்குமான மூல காரணம் இதுதான் என இன்று வரைக்கும்கூட கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால், கொரோனா சிகிச்சைக்கான மருந்துகள், தடுப்பூசிகள் என்ற வகையில்எத்தனைலட்சம்கோடிகள்பணத்தைஇந்த மருந்துத் தயாரிப்பு நிறுவனங்கள் ஈட்டியிருக்கும்?

கொரோனா என்பதே திட்டமிட்டுப் பரவச் செய்யப்பட்ட ஒன்று; சில தனிநபர்கள், சில மருந்து நிறுவனங்கள் இணைந்து நடத்திய உலக மகா கொள்ளை என்று குற்றஞ்சாட்டும் செயற்பாட்டாளர்கள் உலகெங்கும் இருக்கிறார்கள். கொரோனா தடுப்பூசிகளின் மூலம் மட்டுமே இந்த மருந்து நிறுவனங்கள் சம்பாதித்த தொகை எவ்வளவு? கொரோனா காலத்தில் ஒரு குறிப்பிட்ட மருந்து மட்டுமே உலகம் முழுவதும் எவ்வளவு விற்றிருக்கும்? இவற்றின் மூலம் எவ்வளவு பணம், யார் யாருக்குக் கொழித்திருக்கும்? எல்லாமும் விடை தெரியாத கேள்விகள்.

மறைந்த முன்னாள் அதிபர் கென்னடியின் சகோதரர் மகனான ராபர்ட் எஃப் கென்னடி ஜூனியர் பெயரின்அறிவிப்புக்கும்இவற்றுக்கும்என்னதொடர்பு? இன்றைய மருந்துகள், மருத்துவத் துறையின் பல்வேறு நிலைப்பாடுகளை மிகக் கடுமையாக, வெளிப்படையாக எதிர்ப்பவர், விமர்சிப்பவர் ராபர்ட் எஃப் கென்னடி.

தடுப்பூசிகளால் மன இறுக்கம் / நரம்பியல் பிரச்சினைகள் (ஆட்டிசம்) ஏற்படும் என உறுதியாக நம்புகிறவர் ராபர்ட். கடந்த ஜூலையில்கூட ஒரு நேர்காணலில், ‘எந்தவொரு தடுப்பூசியும் பாதுகாப்பானது, திறமானது என்று கூறத்தக்கதல்ல’ என்று குறிப்பிட்டதுடன், (நீண்ட காலத்துக்கு முன்னரே மறுக்கப்பட்ட போதிலும்) தடுப்பூசிகளால் ஆட்டிசம் பாதிப்பு ஏற்படலாம் என்றே இன்னமும் தாம் நம்புகிறார் என்றும் தெரிவித்தவர் ராபர்ட்.

தடுப்பூசி மருந்துகளைப் பரப்புவதற்காகத்தான் (கொரோனா காலத்தில்) தேசிய ஒவ்வாமை - தொற்று நோய்கள் நிறுவனத்தின் இயக்குநராக இருந்த அந்தோனி பாக்சியும் பில் கேட்ஸும் கொரோனா பற்றிப் பரபரப்பாக்குகின்றனர் என்று வெளிப்படையாகக் குற்றஞ்சாட்டியவர்.

(நல்லபயனளிப்பதாகவல்லுநர்கள்தெரிவித்தாலும்) மக்களுக்கு வழங்கப்படும் தண்ணீரிலிருந்து ஃப்ளூரைடை அகற்ற வேண்டும்; பதப்படுத்தாத பாலையே பயன்படுத்தவேண்டும் என்கிற ராபர்ட், கொவிட் சிகிச்சையில் உணவுப் பொருள் மற்றும் மருந்து முகமையின் (ய்லிலி- ழிஜ- ம்ஷறஆ பு-துஷ்ஐஷ்விமிஷழிமிஷ்லிஜ) கருத்துகளுக்கு மாறான நிலைப்பாட்டைக் கொண்டவர்.

நோய்த்தடுப்புமற்றும்கட்டுப்பாட்டுமையங்களின் அறிவுரைகளைப்புறக்கணியுங்கள்,குழந்தைகளுக்குத் தடுப்பூசி மருந்துகளைச் செலுத்தவேண்டாம் என்று ஆலோசனை கூறுபவர்.

மிகவும் சர்ச்சைக்குரிய கருத்துகளைத் தெரிவிக்கிற, மற்றவர்களால் பொருத்தமற்றவை என்று கருதப்படுகிற, இவருடைய நிலைப்பாடுகள் இன்னும்கூட ஏராளமாக இருக்கின்றன. இவையெல்லாமும்தான்பலபெருநிறுவனங்களுக்கு பேரச்சத்தையும்பெருங்கலக்கத்தையும்ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன.

மருந்து நிறுவனங்கள் மட்டுமல்ல, மக்கள் நலன் சார்ந்த வேறு பல அதிரடி நடவடிக்கைகளிலும் புதிய அதிபர் டொனால்ட் டிரம்ப்பின் ‘முழு ஆசிர்வாதத்துடன்’ ராபர்ட் எஃப் கென்னடி ஜூனியர் இறங்கினாலும் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.

ஏனென்றால், டொனால்ட் டிரம்ப் உள்பட அமெரிக்கா முழுவதும் பரவலாக வரவேற்பைப் பெற்றிருக்கும், இவருடைய பொருந்தா உணவு (Junk food) மீது அமெரிக்க மக்கள் கொண்டுள்ள பெருவிருப்பத்துக்கு எதிரான பிரசாரம்தான்.

‘நீண்ட காலமாக தொழில்முறை உணவு நிறுவனங்களாலும் மருந்து நிறுவனங்களாலும் அமெரிக்கர்கள்நசுக்கப்படுகிறார்கள். மக்கள்நலனைப் பொறுத்தவரை இந்த நிறுவனங்கள் ஏமாற்றுகின்றன, தவறான, மோசமான தகவல்களைப் பரப்புகின்றன.

இந்த நாட்டில் பெருமளவுக்கு உடல்நலக் கோளாறுகளுக்குக் காரணமான ஆபத்தான வேதிப் பொருள்கள், மாசுகள், பூச்சிகொல்லிகள், மருந்து உற்பத்திப் பொருள்கள் மற்றும் உணவுகளில் சேர்க்கப்படும் (தேவையின்றி) பொருள்களிலிருந்து மக்கள் ஒவ்வொருவரும் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்வதில் நலவாழ்வு மற்றும் மக்கள் சேவைத் துறை பெரும் பங்காற்றும்’ என்று ராபர்ட் நியமனத்தின்போது குறிப்பிட்டவர் வேறு யாருமல்ல, அதிபர் ஆகவுள்ள டிரம்ப்தான்.

‘பெருந்தொற்றுகளுக்கு முடிவுகட்டி, வெளிப்படைத் தன்மையை உறுதிசெய்து, நாட்டின் பாரம்பரியமிக்க அறிவியல் ஆய்வுகளை கென்னடி மீட்டெடுப்பார்’ என்றும் அறிவித்தார் டொனால்ட் டிரம்ப்.

கென்னடி ஜூனியரின் நியமனத்தையே இன்னமும் பலரால் செரித்துக்கொள்ள முடியாத நிலையில், இந்தியாவில் கொல்கத்தா நகரில் பிறந்து. ஸ்டான்போர்ட் பல்கலைக்கழகத்தில் பயின்றவரான மருத்துவர் ஜெய் பட்டாச்சார்யாவை அமெரிக்க தேசிய நல்வாழ்வு நிலையங்களின் (யுஎஸ் நேஷனல் இன்ஸ்டிடியூட்ஸ் ஆஃப் ஹெல்த் - என்.ஐ.எச்.) தலைவராக நியமித்திருக்கிறார் டொனால்ட் டிரம்ப்.

இவரும் ராபர்ட் போன்ற தனித்துவம் கொண்டவர்தான். கொரோனா பெருந்தொற்றுப் பரவல் காலத்தில் மருத்துவத் துறையெல்லாம் மக்களை அச்சுறுத்திக் கொண்டிருக்கும்போது, பொதுவான (அதிகாரிகளின்) கருத்துக்கு நேர்மாறாக, அனைத்து ஊரடங்குகளையும் ரத்து செய்ய வேண்டும்; முகக் கவசம் கட்டாயம் என்பதும் தேவையில்லை என்று வலியுறுத்தியவர். இதன் மூலம் பெருங்கூட்ட நோயெதிர்ப்பு உருவாகும் என்றும் வாதிட்டவர் ஜெய் பட்டாச்சார்யா. ஊரடங்குகள்தான் மிகப் பெரிய தவறு என்றும் குறிப்பிட்டவர் (என்ன மாதிரியான காம்பினேஷன்!).

இதையே பட்டாச்சார்யாவின் பெயரை அறிவித்தபோது, டிரம்ப்பும் தெரிவித்திருக்கிறார்: ராபர்ட் எஃப் கென்னடி ஜூனியருடன் இணைந்து, அமெரிக்க மக்கள் நலனை மீட்பதில், ஜெய் பட்டாச்சார்யா பெரும் சாதனைகளை நிகழ்த்துவார்! (எனவே, இவருடைய நியமனத்துக்கு எதிராகவும் சலசலப்பு தோன்றியிருக்கிறது).

இவர்கள் இருவரையும் போலவே மருத்துவத் துறைகளில் மேலும் சிலருடைய நியமனங்களையும் டொனால்ட் டிரம்ப் அறிவித்துள்ளார். இவை எல்லாமுமாக சிலருக்கு வயிற்றில் புளியைக் கரைத்துக்கொண்டிருக்கிறது.

சுற்றுச்சூழல் வழக்குரைஞரும் மக்கள் நலனுக்கு

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# மருத்துவத்துக்கே வைத்தியம்.......

4ம் பக்கத் தொடர்ச்சி...........

எதிராக நிறைய சதிகள் பின்னப்பட்டிருப்பதாக வாதிடுபவருமான கென்னடிஜூனியர், தொடக்கத்தில்ஜனநாயகக்கட்சியின்சார்பில்தான் அதிபர்தேர்தலில்போட்டியிடுவதற்கான பணிகளைத் தொடங்கினார். பின்னர், ஜனநாயகக் கட்சி சார்பில் அல்லாமல் சுயேச்சையாகப் போட்டியிடுவதாக அறிவித்து ஆதரவு திரட்டி வந்தார்.

திடீரென கடந்த ஒகஸ்ட் மாதத்தில் போட்டியிலிருந்து விலகுவதாக அறிவித்த ராபர்ட், அதிபர் தேர்தலில் டிரம்ப்பை ஆதரிப்பதாக அறிவித்துப் பரப்புரையும் செய்யத் தொடங்கினார். இப்போது டிரம்ப் அரசின் அங்கமாகவும் ஆகிவிட்டார் (விவேக் ராமசாமியைப் போலவே!).

இந்த முறை தேர்தலில் தாம் வெற்றி பெற உதவியவர்கள்-விசுவாசிகள் - ஒவ்வொருவரையும் தேடித் தேடிப் பதவியளித்துக் கொண்டிருக்கும் டிரம்ப், யாருமே எதிர்பாராத வகையில் ராபர்ட் கென்னடியிடம் நல்வாழ்வுத் துறையை ஒப்படைத்திருக்கிறார். (இந்த விசுவாசிகளின் அலங்கரிப்புக்குப் பின்னால் டிரம்ப்பின் கடந்த கால கசப்பான அனுபவம்தான் காரணமாக இருக்கவேண்டும் என நம்பப்படுகிறது. 2016 அதிபர் தேர்தலில் வெற்றி பெற்ற டிரம்ப், கட்சி சார்பற்றவர்களாக இருந்தாலும்கூட பல 'அறிவாளிகளை' அமைச்சரவையில் சேர்த்துக்கொண்டார். ஆனால், பின்னர் இவர்களே டிரம்ப்பின் செயல்பாடுகளைக் கேலியாக விமர்சிக்கத் தொடங்கிவிட்டனர். எனவே, இந்த முறை அறிவாளிகள் என்பதைவிட விசுவாசம்தான் முக்கியம் என்று டிரம்ப் கருதியிருக்கிறார்போல).

அதிபர் டொனால்ட் டிரம்ப் நியமனங்கள் அனைத்தையும் அமெரிக்க செனட் உறுதி செய்ய வேண்டியது அவசியம். ஒருவேளை இந்த மருந்துப் பெரு நிறுவனங்கள் அணி திரண்டு (இவர்களால் என்ன வேண்டுமானாலும் செய்ய முடியும், செலவழிக்கவும் முடியும்) ராபர்ட் எஃப் கென்னடி ஜூனியர் நியமனத்தைக் காலி செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும் ஆபத்தும் இருக்கிறது.

ராபர்ட் எஃப் கென்னடி ஜூனியர், ஜெய் பட்டாச்சார்யா ஆகியோரின் நியமனங்கள் தொடர்பாக விமர்சனங்கள் இருந்தாலும் பெரு மருந்து நிறுவனங்களுக்கு எதிரான மாற்றுச் சிந்தனை கொண்டவர்களான இவர்களை மிகவும் சக்தி வாய்ந்த இடங்களில் பொருத்தியிருக்கிறார் டிரம்ப்.

புலம்பெயர்ந்தோர் விவகாரம், பெண்களின் கருக்கலைப்பு உரிமை போன்ற விவகாரங்களில் டிரம்ப்பின் நிலைப்பாடுகள் அச்சமூட்டுவதாக இருந்தாலும் இவ்விருவரின் நியமனங்களும் இவர்களின் பணியும் ஒருவேளை எதிர்காலத்தில் உலகளாவிய அளவில் மருந்துகள் துறையில் (ஆராய்ச்சி, தயாரிப்பு, சந்தை) பெரிய மாற்றங்களை, பெரும் நன்மைகளை ஏற்படுத்தக் கூடிய மருந்துகளின் பிடியிலிருந்து மக்களை விடுவிக்கக் கூடிய - நல்ல வாய்ப்பும் இருக்கிறது!

# தரமற்ற மருந்து விநியோகிக்கப்பட்டதாக வெளியாகியுள்ள செய்தி பொய்யானதாம்

அரச வைத்தியசாலைகளுக்கு 500 தரமற்ற மருந்துகள் விநியோகிக்கப்பட்டுள்ளன என வெளியாகியுள்ள செய்திகள் முற்றிலும் பொய்யானவை.

தவறான செய்திகளை சமூகமயப்படுத்துவதை தவிர்த்துக் கொள்ளுமாறு உரிய தரப்பினரிடம் கேட்டுக் கொள்கிறோம் என சுகாதாரத்துறை மற்றும் ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.



நாடாளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற இடைக்கால கணக்கறிக்கை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது -

நாட்டில் உள்ள அரச வைத்தியசாலைகளுக்கு 500 தரமற்ற மருந்துகள் விநியோகிக்கப்பட்டுள்ளன என எதிரணியின் பிரதம கொறடா வெள்ளிக்கிழமை காலை முன்வைத்த விடயம் குறித்து சுகாதார அமைச்சுடனும், உரிய தரப்பினருடனும் கலந்துரையாடி , தகவல்களை பெற்றுக் கொண்டேன்.

எவ்விதமான தரமற்ற மருந்துகளும் அரச வைத்தியசாலைகளுக்குவிநியோகிக்கப்படவில்லை என்று மருந்து விநியோக பிரிவும், தேசிய மருந்து கட்டுப்பாட்டு அதிகார சபையும் குறிப்பிட்டுள்ளது. ஆகவே, தவறான விடயங்களை குறிப்பிடுவதை தவிர்த்துக் கொள்ளுமாறு உரிய தரப்பினரிடம் கேட்டுக் கொள்கிறோம்.

சுகாதாரத்துறையில் எந்த பிரச்சினைகளும் கிடையாது என்று நாங்கள் குறிப்பிடவில்லை. காணப்படும் பிரச்சினைகளுக்கு உரிய முறையில் தீர்வு எட்டப்படும் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மருந்து தட்டுப்பாடுகள் காணப்படுமாயின் உரிய வழிமுறைகளுக்கு அமைய பிரதேச ரீதியில் உரிய விநியோகஸ்தர்களிடமிருந்து மருந்துகளை கொள்வனவு செய்ய முடியும். அதற்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

500 தரமற்ற மருந்துகள் விநியோகிக் கப்பட்டுள்ளன எனக் குறிப்பிடப்படுகிறது, ஆனால் அது எவ்வகையான மருந்துகள் என்று வெளிப்படையாக குறிப்பிடப்படவில்லை. ஆகவே, தாம் பெற்றுக் கொள்ளும் மருந்து தரமற்றதா என்று பொது மக்கள் சந்தேகம் கொள்ள நேரிடும். ஆகவே பொறுப்பில் உள்ளவர்கள் முறையற்ற வகையில் கருத்துக்களை குறிப்பிடுவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளர் ருக்ஸான் பெல்லன்வில ஊடகங்களுக்கு குறிப்பிட்ட விடயத்தை அடிப்படையாகக் கொண்டே எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடா மக்களின் நலன் கருதி இந்த கேள்வியை முன்வைத்திருந்தார். ஆகவே எவ்விதமான தரமற்ற மருந்துகளும் வைத்தியசாலைகளுக்கு விநியோகிக்கப்படவில்லை என்பதை உறுதியாக குறிப்பிட்டுக் கொள்கிறேன். - என்றார்.



# இன்று சிட்னியில் வெளியாகிறது முள்ளி வாய்க்கால் பேரவல சாட்சியான மருத்துவர் வரதராஜாவின் நூல்

(ஐங்கரன் விக்கினேஸ்வரா)

தமிழினப் படுகொலையின் சாட்சியும், 2009 வன்னி போர்க்களத்தில் இறுதிவரை பணியாற்றிய மருத்துவர்களில் ஒருவருமான மருத்துவர் வரதராஜா அவர்களின் 'தமிழ் இனப்படுகொலையின் சொல்லப்படாத உண்மை' இன்று சிட்னியில் வெளியிடப்பட உள்ளது.

'தமிழினப் படுகொலையின் சொல்லப்படாத உண்மைகள்' எனும் வைத்தியர் துரைராஜா வரதராஜாவின் வாழ்க்கை வரலாறு நூல் ஆஸ்திரேலியாவில் அடிலெய்ட், மெல்போர்ண் நகர்களில் ஏற்கனவே வெளியாகி உள்ளன.

இறுதிப் போரில் தாயக மக்களுக்கு முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை பேரவலத்தின் போது மகத்தான சேவையாற்றிய மருத்துவரை மதிப்பளிக்கும் வண்ணம் இன்று (ஞாயிற்றுக்கிழமை) சிட்னியில் புத்தக வெளியீடும் நேரடி சந்திப்பு கலந்துரையாடலும் நடைபெறுகிறது.

இந்நூல் வெளியீடு இன்று (ஞாயிற்றுக்கிழமை) மாலை 05.00 மணிக்கு பிளாக் டவுண் நகர நூலக மண்டபத்தில் நடைபெறுகிறது.

சர்வதேசம் எங்கும் ஈழத்தமிழர்களின் பலத்த ஆதரவுடன் வெளியிடப்பட்ட வைத்தியர் துரைராஜா வரதராஜாவின் வாழ்க்கை வரலாறு நூல் ஆங்கில மொழியில் ரஜீ பட்டீசன் எழுதிய 'தமிழினப்படுகொலையின் சொல்லப்படாத உண்மைகள் ' என்பது ஈழத் தமிழர்களின் துயரமான வரலாற்றையும், அவர்களுக்கு நிகழ்ந்த கொடூரங்களையும் ஆவணமாக்கும் ஒரு முக்கியமான நூலாகும்.

பேரவலம் நிகழ்ந்த முள்ளிவாய்க்காலின் இறுதி நாள்களில் நடந்த இன அழிப்பு நிகழ்வுகளையும், அதன் மையத்தில் நின்று ஆயிரக்கணக்கான மக்களின் உயிர்களைகாப்பாற்ற முயன்றவைத்தியர்துரைராஜா வரதராஜாவின் தியாகத்தையும்,இந்த நூல் ஈழத் தமிழர்களின் தனித்துவமான கலாசாரத்தையும், அவர்களின் அடையாளங்களையும் அழிக்க நடத்தப்பட்ட சதியை முழுமையாக வெளிக்கொண்டு வருகிறது.

ஏராளமான பல்லின அரசியல் சூழ்நிலைகளின் விளைவாக ஈழத் தமிழர்கள் தங்கள் உரிமைகள், பங்காளித்துவம், மற்றும் சுயாட்சி ஆகியவற்றுக்காக எப்படி போராடினார்கள் என்பதையும் இந்நூல் எடுத்துக்கூறுகிறது.

இதுவரை மறைக்கப்பட்ட வரலாற்றை அடுத்த தலைமுறைக்கு சொல்லித் தரும் முயற்சியாக இந்நூல் திகழ்கிறது. இது வரலாற்றை மறக்காமல் அதன் பாடங்களை ஆழமாகப் புரிந்து கொள்ளுமாறு இளைய தலைமுறையினருக்கு புகட்டும் ஒரு படைப்பாக இது விளங்குகிறது. ஈழத் தமிழர்களின் துயர அனுபவங்கள், அவர்களது எதிர்கால சுதந்திரத்திற்கான போராட்டத்திற்கு அடித்தளமாக அமைந்தன என்பதையும், எந்த சூழலிலும் மனிதநேயத்தை உயர்த்தி நிறுத்தும் பொறுப்பை உணர்த்துகிறது.

வைத்தியர் துரைராஜா வரதராஜா ஈழத் தமிழர்களின் உண்மையான மனிதநேய வைத்தியராக திகழ்கிறார். அவர் காட்டிய தியாகம், உலகமெங்கும் தமிழ் இனத்தின் எதிர்கால காலப்பகுதிகளுக்கு நம்பிக்கை மற்றும் நீதி தேடும் சான்றாக உள்ளது. ஆங்கில பதிப்பு மூலம் இந்த நூல், ஈழத் தமிழர்களின் துயர வரலாற்றை உலகளாவிய அரங்கில் கொண்டு சேர்க்கும் ஓர் அரிய முயற்சியாக திகழ்கிறது.

தாயக மக்களுக்கு முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை பேரவலத்தின் போது மகத்தான சேவையாற்றிய மருத்துவ பெருமகனை மதிப்பளிக்க இந்நிகழ்வினை ஆஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ் ஒழுங்கமைத்துள்ளது.

## கிழக்கு மாகாண அமைச்சுகளுக்கு புதிய செயலாளர்கள் நியமனம்

(அபு அலா)

கிழக்கு மாகாண அமைச்சுக்களுக்கான புதிய செயலாளர்கள் நியமிக்கப்பட்டு அவர்களுக்கான கடிதங்களை கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகரவால் நேற்று (வெள்ளிக்கிழமை) வழங்கி வைக்கப்பட்டது.

அதற்கமைவாக, விவசாய அமைச்சின் செயலாளராக கடமையாற்றி வந்த எம்.எம்.நஸீர் வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளராகவும், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளராக கடமையாற்றி வந்த இஷட்.ஏ.எம்.பைஷல் முதலமைச்சின் செயலாளராகவும், ஆளுநர் செயலக செயலாளராக கடமையற்றி வந்த எல்.பி.மதநாயக்க சுகாதார அமைச்சின் செயலாளராகவும், கல்வி அமைச்சின் செயலாளராக கடமையாற்றி வந்த எச்.ஈ.எம்.டபிள்யூ.ஜீ.திஸாநாயக்க விவசாய அமைச்சின் செயலாளராகவும், வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளராக கடமையாற்றி வந்த எம்.கோபாலரத்னம் பேரவைச் செயலாளராகவும், கல்முனை பிரதேச செயலாளராக கடமையாற்றி வந்த ஜே.லியாக்கத்தலி மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலைமையில் கிழக்கு மாகாண ஆளுநர் செயலக செயலாளர் மற்றும் கல்வி அமைச்சின் செயலாளர் யாரும் நியமிக்கப்படவில்லை.


புதிய அமைச்சுக்களின் செயலாளர்களாக நியமிக்கப்பட்டவர்கள் எதிர்வரும் திங்கட்கிழமை தங்களின் அமைச்சுக்களின் கடமைகளை பொறுப்பேற்கும்படி சகல செயலாளர்களுக்கும் கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர பணிப்புரை விடுத்துள்ளார்.

## கடல் கொந்தளிப்பால் மீனவர்கள் கடலுக்கு செல்லமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது

(ஷினாஸ்)

தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக கிழக்கு கடல் கொந்தளிப்பாக காணப்படுகிறது. இதனால் கரைவலை மற்றும் ஆழ்கடல் மீனவர்கள் கடலுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை, மருதமுனை, பாண்டிருப்பு, பெரியநீலாவணை போன்ற கரையோர பிரதேசங்களில் வாழும் மீனவர்கள் தமது படகுகள், தோணிகள் மற்றும் மீன்பிடி உபகரணங்களை நேற்று (சனிக்கிழமை) கடற்கரையிலிருந்து உயரமான



இடங்களுக்கு பாதுகாப்பான முறையில் ஏற்றி வைத்துள்ளனர்.

தொடர்ச்சியாக பல நாள்களாக கடலுக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டிருப்பதால் தமது ஜீவனோபாய தொழிலான மீன்பிடித் தொழில்பாதிக்கப்பட்டுள்ளதாகவும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.



## வவுணதீவு நல்லம்மாமடு அணைக்கட்டுக்கு சேதம்

### புனரமைக்குமாறு விவசாயிகள் வேண்டுகோள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட பாரிய வெள்ளப் பெருக்கினால் வவுணதீவு பிரதேசத்துக்குட்பட்ட இலுப்பட்டிச்சேனை வயற்கண்ணத்தில் அமைந்துள்ள நல்லம்மா மடு எனும் அணைக்கட்டு முற்றாக சேதமடைந்துள்ளதாக அப்பகுதி விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்த அணைக்கட்டில் தேக்கப்படும் நீரைப் பயன்படுத்தி நாம் இப்பகுதியில் 1,050 ஏக்கர் வயலில் வேளாண்மை செய்து வருகிறோம். இது தற்போது உடைபெடுத்துள்ளதனால் எமது வாழ்வாதாரமாக அமைந்துள்ள வேளாண்மைச் செய்கை முற்றாக பாதிப்புறும் நிலைமை ஏற்பட்டுள்ளது என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில், பெரிதும் சேதமடைந்துள்ள, விவசாயத்துக்கு உறுதுணையாக இருந்த அணைக்கட்டை விரைவில் புனர்நிர்மானம் செய்துதர வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அத்தோடு, நீர்ப்பாசனம் செய்யப்படுகிற துருசுகளையும் திருத்தியமைத்து தருமாறும் விவசாயிகள் அரசாங்கத்திடம் கேட்டுக்கொண்டுள்ளனர்.

## தேயிலை மலையில் 60 அடி ஆழக் குழி தோண்டி மாணிக்கக் கல் அகழ்வில் ஈடுப்பட்ட நபர் கைது

(கிஷாந்தன்)

பொகவந்தலாவ பொலிஸ்பிரிவுக்குட்பட்ட டின்சின் தேயிலை தோட்டத்தில் சுமார் 60 அடி ஆழத்தில் குழி தோண்டி, மாணிக்ககல் அகழ்வில் ஈடுப்பட்ட சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டார் என பொகவந்தலாவ பொலிஸ் நிலையத்தின் அதிகாரி நுவான் மதுசங்க தெரிவித்தார்.

பொகவந்தலாவ டின்சின் தோட்டத்திற்கு செல்லும்நடைபாதைக்கு அருகில்உள்ளதேயிலை மலைப்பகுதியில்குழிதோண்டி,இரத்தினக்கற்கள் அடங்கிய மண்ணை சந்தேக நபர் வீட்டிற்கு கொண்டு சென்று குறித்த மண்ணை கழுவிக் கொண்டிருந்ததாகவும், அதன் போதே அவர் கைது செய்யப்பட்டதாகவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரைஹட்டன் நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தார்.

## லஞ்ச ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பான ஐக்கிய அமெரிக்காவின் உதவிச் இராஜாங்க செயலாளர் டொனால்ட் லூ தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மற்றும் தெற்கு மத்திய ஆசிய அலுவல்கள் தொடர்பான ஐக்கிய அமெரிக்காவின் உதவிச் இராஜாங்க செயலாளர் டொனால்ட் லூ ஆகியோருக்கு இடையில் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக ஜனாதிபதி செயலகம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அரசியல் பொருளாதார மற்றும் சமூக விடயங்கள் தொடர்பில் முக்கியத்துவத்தை அறிந்துகொண்டு புதிய ஆளும்தரப்புக்கொண்டு செல்லும் வேலைத்திட்டத்தை அமெரிக்க அரசு பாராட்டுகின்றது. இலங்கையின் பாதுகாப்பு மற்றும் பொருளாதார முன்னேற்றத்துக்கான நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்க அமெரிக்கா தயாராக இருக்கின்றது என்றார் டொனால்ட் லூ.

இலங்கையில் ஊழல் மற்றும் வீண் விரயம் மீது அரசியல் கலசாரம் நேரடியாக தாக்கம் செலுத்துவதாகவும் புதிய அரசியல் கலாசாரத்தை உருவாக்கி ஊழலையும் வீண் விரயத்தையும் மட்டுபடுத்த ஆளும்தரப்பு நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இந்தச் சந்திப்பில் தெரிவித்தார்.

கிராமியப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதன் ஊடாக கிராமிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான வேலைத்திட்டத்தை ஆரம்பித்திருப்பதோடு புதிய தொழில்நுட்பத்தை அரச துறையில் அறிமுகப்படுத்தி தரமான அரச சேவையை உருவாக்குவதற்குத் திட்டமிட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தச்சந்திப்பில்தொழில்அமைச்சர்மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் பேராசிரியர் அனில் ஜயந்த பெர்னாண்டோ, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி சனத் நந்திக குமாநாயக்க, ஜனாதிபதியின் மேலதிகச் செயலாளர் ரொஷான் கமகே, இலங்கைக்கான ஐக்கிய அமெரிக்காவின் தூதுவர் ஜூலி சங், ஆசியாவுக்கான பிரதி உதவி நிர்வாகி அஞ்சலி கவூர், ஐக்கிய அமெரிக்க திறைசேரி திணைக்களத்தின் ஆசிய மற்றும் பசுபிக் வலயங்களுக்கான பிரதி உதவிச் செயலாளர் ரொபர்ட் கப்ரொத், தூதுக்குழுவின் பணிப்பாளர் கேப்ரியல்க்ராவ், அரசியல் மற்றும் பொருளாதார அலுவல்கள் தொடர்பிலான ஆலோசகர் ஷோன் கிரே ஆகியோர் இதன்போது கலந்து கொண்டனர்.

# விபத்தில் உயிரிழந்த அரிய வகைப் புலி

(பாறுக் ஷிஹான்)

அம்பாறைமாவட்டம்நாவிதன்வெளி பிரதேச செயலகத்திற்குட்பட்ட கிட்டங்கி ஆற்றின் அருகே மீன்பிடிப் பூனை இனத்தை சேர்ந்ததென நம்பப்படும் குட்டியொன்று நேற்று விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளது.

மீன்பிடி பூனை(அரிய வகை புலி) என அழைக்கப்படுவதுடன் மக்கள் வாழும் பகுதியில் இவ்வாறான அரிய வகை புலிகள் காடுகளில் இருந்து உள்நுழைந்து மீன் உட்பட கிராம வாசிகளின் வளர்ப்பு பிராணிகளை வேட்டையாடி வந்தநிலையில் இவ்வாறு விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த மீன்பிடிப் பூனை இலங்கையில் கொடுப்புலி என அழைக்கப்படுவதுடன் ஒரு நடுத்தர காட்டுப்பூனையாக குறிப்பிடப்படுகின்றது. இது தென் மற்றும் தென்கிழக்கு ஆசியாவில் காணப்படுகின்றன. கடந்த காலங்களில் இம்மாவட்ட பொதுமக்கள் சிலர் குறித்த அரிய வகை புலி போன்ற



பூனை இனங்களை பிடித்துள்ளதுடன் வனஜீவராசி திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்த சம்பவமும் இடம்பெற்றுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.







# 5 எஸ் திட்டத்தின் கீழ் செயற்படும் பொலிஸ் நிலையமாக பளை தெரிவு



பொது மக்களுக்கு சிறந்த வினைத்திறனான சேவையை வழங்கும் நோக்குடன் பொலிஸ் மா அதிபரின் எண்ணக்கருவுக்கமைய பொலிஸ் நிலையங்களை 5 எஸ்திட்டத்திற்கு கொண்டுவரும் ஓர் அங்கமாக வடமாகாணத்தில் முதலாவது பொலிஸ்





பிரதிப்பொலிஸ்மா அதிபர் சி.ஏ.தனபால திறந்து வைத்தார்.

மேற்படி நிகழ்வில் கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்ட சிரேஸ்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர் சமந்தடீசில்வா, கிளிநொச்சி பிராந்தியத்திற்குப் பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகர் உப்புல் செனவரத்ன, கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள், பளை பிரதேச கிராம மட்ட அமைப்புக்களின்பிரதிநிதிகள் என கலந்து கொண்டனர். 316

# தமிழ் இன அழிப்பின் நினைவாக பிரான்ஸில் நினைவுக்கல் திறப்பு

பிரான்ஸில்தமிழர்கள்அதிகம்வாழும் மாவடத்தில் உள்ள பொபிணி பாபிக்னி நகரசபையால் தமிழினவழிப்பின் நினைவாக சமாதானத்தை குறிக்கும் ஒலிவ் மரம் நாட்டப்பட்டு நினைவுக் கல்லும் நேற்று (சனிக்கிழமை) திறந்துவைக்கப்பட்டது.



குறித்த நினைவுக்கல்லை பாபிக்னி பொபினி நகரபிதாவும் மாவட்டசபை உறுப்பினருமான அப்தெல் சாடி திறந்துவைத்தார்.

குறித்தநினைவுக்கல்லின்'சிறீங்கங்கா அரசால் 1948 முதல் 2009 மே மாதம் வரை இனவழிப்பு செய்யப்பட்ட தமிழீழ மக்களின் நினைவாக' என்ற வாசகங்கள் பிரஞ்சு மொழியிலும் தமிழ் மொழியிலும் பொறிக்கப்பட்டிருந்தன.

நகரசபை மேயர் அப்தெல்சாடி உரையாற்றும் போது பொபினி நகரசபையில் 2021 தமிழினவழிப்பை அங்கீகரத்து தீர்மானம் நிறைவேற்றிதையும் , பொபினி நகரம் தமிழ் மக்களின் நீதியை வென்றெடுக்க துணைநிற்பதையும் சுட்டிக்காட்டினார்.

# திண்மக் கழிவு மேலாண்மை திட்டத்தை வடக்கில் தொடங்க கொரியா ஒத்துழைப்பு

இலங்கையின் சுற்றாடல் மற்றும் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்தில் ஆரம்பிக்கப்பட்ட திண்மக்கழிவு மேலாண்மை திட்டத்தை ஊவா மற்றும் வட மாகாணங்களில் செயற்படுத்துவதற்கு கொரிய சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் முன்வந்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ், பதுளை மற்றும் வவுனியா மாவட்டங்களில் திண்மக்கழிவு மேலாண்மை முகாமைத்துவத்தின் சவால்களை எதிர்கொள்ள 11 மில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்வதற்கு கொரிய சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

இலங்கையின் சுற்றாடல் மற்றும் பொருளாதாரத்தை மேம்படுத்துவதே இந்த திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். கொரிய சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் இலங்கை பணிப்பாளர் முஷ்அ ஆலைரபெதுஷ்ஜ தெரிவிக்கையில்,

'சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான உலகளாவிய கூட்டாண்மைகளை முன்னேற்றுவதற்கான முழுஜஊயு இன் அர்ப்பணிப்பை இந்தத் திட்டம் எடுத்துக்காட்டுகிறது. இந்த திட்டத்தின் ஊடாக இலங்கையுடனான எமது இருதரப்பு உறவுகளை மேம்படுத்த முடியும் என நாம் நம்புகின்றோம் என தெரிவித்தார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

# சிறுபான்மை மக்கள் கருத்துக்களை உள்வாங்கும் வகையில் சமாதான மற்றும் நல்லிணக்க முயற்சிகளை வலுப்படுத்துக

## பொதுநலவாய தேர்தல் கண்காணிப்புக்குழு அரசுக்குப் பரிந்துரை

எதிர்கால மோதல்களைத் தவிர்க்கும் வகையில் சிறுபான்மையின மக்களின் கருத்துக்கள் அர்த்தமுள்ள விதத்தில் உள்வாங்கப்படுவதை உறுதிசெய்வதற்கு ஏதுவாக சமாதான மற்றும் நல்லிணக்க முயற்சிகளை இலங்கை அரசாங்கம் மேலும் வலுப்படுத்தவேண்டும் என பொதுநலவாய தேர்தல் கண்காணிப்புக்குழு நடைபெற்றுமுடிந்த ஜனாதிபதித்தேர்தல் தொடர்பான அதன் இறுதி அறிக்கையில் வலியுறுத்தியுள்ளது.

நாட்டின் ஒன்பதாவது ஜனாதிபதித்தேர்தல் கடந்த செப்ரெம்பர் மாதம் 21 ஆம் திகதி நடைபெற்றது. இத்தேர்தல் சுதந்திரமானதும், நியாயமானதுமான முறையில் நடைபெறுகின்றதா என்பதைக் கண்காணிப்பதற்காக தேர்தல் ஆணைக்குழுவால் விடுக்கப்பட்ட அழைப்புக்கு இணங்க இலங்கைக்கு வருகைதந்த சிஷேல்ஸ் நாட்டின் முன்னாள் ஜனாதிபதி டெனி ஃபோர் தலைமையிலான 13 பேரடங்கிய பொதுநலவாய அமைப்பின் தேர்தல் கண்காணிப்புக்குழுவினர், நாட்டின் சகல தேர்தல் மாவட்டங்களுக்கும் விஜயம் மேற்கொண்டு தேர்தலுக்கு முன்னரான பிரசார காலப்பகுதி, தேர்தல் தினத்தன்று நடைபெறும் செயன்முறைகள், தேர்தல் முடிவடைந்ததன் பின்னரான நிலைவரம் என்பவற்றைப் பரந்துபட்ட ரீதியில் கண்காணித்தனர்.

அக்கண்காணிப்பு நடவடிக்கைகளின் முடிவில் அவதானிக்கப்பட்ட விடயங்களைப் பகிர்ந்துகொள்ளும் நோக்கில் கடந்த செப்ரெம்பர் 23 ஆம் திகதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட கண்காணிப்புக்குழுத் தலைவர் டெனி ஃபோர், 'இலங்கையின் ஒன்பதாவது ஜனாதிபதித்தேர்தல் மிக அமைதியானதும், நம்பகத்தன்மை வாய்ந்ததுமான முறையில் நடைபெற்று முடிந்திருக்கிறது. பெரும்பாலான வாக்காளர்களுக்கு விருப்பு வாக்களிப்பு செயன்முறை மற்றும் அதன் அவசியம் குறித்த போதிய விழிப்புணர்வு இல்லை. எதிர்வருங்காலங்களில் அவ்விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டியது அவசியமாகும்' என்று வலியுறுத்தியிருந்தார்.

இவ்வாறானதொரு பின்னணியில் இலங்கையின் ஒன்பதாவது ஜனாதிபதித்தேர்தல் தொடர்பான பொதுநலவாய தேர்தல் கண்காணிப்புக்குழுவின் 114 பக்கங்களைக்கொண்ட இறுதி அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது.

'ஜனாதிபதித்தேர்தலுக்கான பின்னணியையும், சூழலையும் நிர்ணயிப்பதில் 2022 ஆம் ஆண்டு நடைபெற்ற 'அரகலய' என அறியப்படும் மக்கள் எழுச்சிப்போராட்டம் மிகமுக்கிய வகிபாகத்தைக் கொண்டிருந்தது. அப்போராட்டத்தின் விளைவாக அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி கவிழ்க்கப்பட்டு, அவரது பதவிக்காலத்தைப் பூர்த்திசெய்வதற்கான ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்க நாடாளுமன்றத்தால் தெரிவுசெய்யப்பட்டார்.

அதன்படி நடைபெற்றுமுடிந்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்ரமசிங்க உள்ளடங்கலாக 39 ஆண் வேட்பாளர்கள் போட்டியிட்டனர். இத்தேர்தலில் எந்தவொரு வேட்பாளரும் 50 சதவீதத்துக்கு மேற்பட்ட வாக்குகளைப் பெறத்தவறியதை அடுத்து, இலங்கை வரலாற்றில் முதற்தடவையாக விருப்பு வாக்குகள் எண்ணப்பட்டு, அதனடிப்படையில் அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியாக அறிவிக்கப்பட்டார்.

இத்தேர்தலானது நம்பகமானதும், வெளிப்படைத்தன்மை வாய்ந்ததுமான முறையில் நடத்தப்பட்டதுடன், வாக்களிப்பு நிலையங்களுக்கு பெரும் எண்ணிக்கையில் திரண்டுவந்து வாக்களித்தமைக்காக மக்களையும் பாராட்டவேண்டும்' என்று அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதேபோன்று தேர்தல் காலப்பகுதியில் அரச வளங்கள் தவறான முறையில் பயன்படுத்தப்பட்டமை தொடர்பில் தமது இறுதி அறிக்கையில் கரிசனையை வெளிப்படுத்தியுள்ள பொதுநலவாய கண்காணிப்புக்குழு, தேர்தல் பிரசாரங்களுக்கு செலவிடப்படும் நிதி குறித்த கண்காணிப்பு செயன்முறையை மேலும் செயற்திறன் மிக்கதாக மாற்றியமைப்பதும், ஊடகங்களுக்கான ஒழுக்கநெறிக்கோவையை வலுப்படுத்துவதும் அவசியம் என வலியுறுத்தியுள்ளது.

அதேவேளை இலங்கையின் தேர்தல் செயன்முறையை மேலும் வலுப்படுத்துவதை முன்னிறுத்தி மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான பரிந்துரைகள் இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு வெளியகத்தரப்பினரால் வழங்கப்படும் நன்கொடைகள் மற்றும் தனியார் நிதியளிப்பு என்பவற்றுக்கான மட்டுப்பாடொன்றை விதித்தல், ஊடகவிளம்பரங்களுக்காக செலவிடப்படும் நிதியை மட்டுப்படுத்துவதுடன், இவ்விடயத்தில் ஊடகங்களுக்கான வரையறைகளை நிர்ணயித்தல், தேர்தல் சார்ந்த குற்றங்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான அதிகாரத்தை தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு வழங்கல் ஆகியவற்றுக்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

அடுத்ததாக பிரசார நடவடிக்கைகளுக்காக சட்டவிரோத நிதி பயன்படுத்தப்படுவதைத் தடுக்கும் வகையிலான உறுதியான வழிகாட்டல்களை நடைமுறைப்படுத்தல், பிரசார நிதி ஒழுங்குபடுத்தல் சட்டத்தை மீறிச்செயற்படும் வேட்பாளர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை மேலும் கடினமாக்கல், தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பான முறைப்பாடுகளின் எண்ணிக்கை மற்றும் நடவடிக்கை எடுக்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை என்பன தொடர்பில் வெளிப்படையான தரவுகளைப் பேணல், வயது முதிர்ந்தோர் மற்றும் விசேட தேவையுடையோரின் உரிமைகள் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான செயற்திட்டங்களை ஒழுங்குசெய்தல் ஆகிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அத்தோடு எதிர்கால மோதல்களைத் தவிர்க்கும் வகையில் சிறுபான்மையின மக்களின் கருத்துக்கள் அர்த்தமுள்ள விதத்தில் உள்வாங்கப்படுவதை உறுதிசெய்வதற்கு ஏதுவாக சமாதான மற்றும் நல்லிணக்க முயற்சிகளை இலங்கை அரசாங்கம் மேலும் வலுப்படுத்தவேண்டும் என்றும் பொதுநலவாய தேர்தல் கண்காணிப்புக்குழு அதன் அறிக்கையில் வலியுறுத்தியுள்ளது.

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்


# பிரதேச செயலகம் என்ற ஒன்றே கல்முனை வடக்கில் இலலையாம்

(பாறுக் ஷிஹான்)

கல்முனை வடக்கு செயலகம் என்ற செயலகம் இல்லை. அத்துடன் இது விடயத்தில் கடந்த கால ஜனாதிபதிகள் இது பற்றி முஸ்லிம் தரப்புகளுடன் பேசாமல் எத்தகைய தீர்வுக்கும் வரமுடியாது என்றே கூறியுள்ளனர். கல்முனை வடக்கு பிரதேச செயலகம்சம்பந்தமாகஅதற்குரிய அமைச்சின் செயலாளருடன்தான்பேசுவதாகஜனாதிபதி அநுரகுமார, சாணக்கியன் எம்.பி உட்பட்ட தமிழ் கூட்டமைப்பு எம்.பிக்களிடம் உறுதி தெரிவித்ததாக சாணக்கிய கூறியுள்ளமை பற்றி ஜனாதிபதி தரப்பு தெளிவுபடுத்த வேண்டும் என உலமா கட்சித் தலைவர் முபாறக் முப்தி தெரிவித்துள்ளார்.



கல்முனை உப பிரதேச செயலகம் தொடர்பில்அண்மையில்ஜனாதிபதியுடனான சந்திப்பின் பின்னரே சாணக்கியன் எம்.பி கூறிய கருத்திற்கு பதிலளிக்கும் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இவ்விடயம் தொடர்பில் ஊடகங்களுக்கு அவர் அனுப்பி வைத்துள்ள செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளதாவது -

கல்முனை வடக்கு செயலகம் என்ற செயலகம் இல்லை. அத்துடன் இது விடயத்தில் கடந்த கால ஜனாதிபதிகள் இது பற்றி முஸ்லிம் தரப்புகளுடன் பேசாமல் எத்தகைய தீர்வுக்கும் வரமுடியாது என்றே சொல்லியுள்ளனர். 2020 ஆம் ஆண்டு பிரதமராக இருந்த மஹிந்த ராஜபக்ஷவிடம் கருணா இக்கோரிகையை முன் வைத்த போது அக்கூட்டத்தில் கலந்து கொண்ட உலமா கட்சித்தலைவர் இது சம்பந்தமாக முஸ்லிம்களின்கருத்தை கேட்காமல்முடிவுக்கு வரவேண்டாம் என தெரிவித்ததை மஹிந்த ராஜபக்ஷ ஏற்றிருந்தார்.

இத்தனைக்கும் மஹிந்தவிற்கு எந்தத் தேர்தலிலும் கல்முனை முஸ்லிம்களில் 20 வீதத்துக்கு மேல் வாக்கு போட்டதில்லை. அது போல் பசில் ராஜபக்ஷ அமைச்சராக இருந்த போது இது சம்பந்தமாக பேசதமிழ் எம்.பீக்கள் முற்பட்ட போது அது பற்றி பேச வேண்டாம் என அவர் உறுதிபடக் கூறியிருந்தார். இந்த பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு கல்முனைத்தொகுதி முஸ்லிம்களில் 70 வீதமானோர் வாக்கு போட்டதுடன் கல்முனை தொகுதியை தேசிய மக்கள் சக்தி கைப்பற்ற உலமாக் கட்சி உட்படப் பலரும் உதவியுள்ளனர்.

ஆகவே கல்முனையை வடக்கு கிழக்கு என்றோ தமிழ் செயலகம் முஸ்லிம் செயலகம் என்றோ இனரீதியில் பிரிப்பதற்கு ஜனாதிபதி அநுரகுமார இடமளிக்க கூடாது என்பதை வலியுறுத்துகிறோம். தமிழர்கள் பிரச்சினைகள் சம்பந்தமாகவும், கல்முனை செயலகம் சம்பந்தமாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நாடாளுமன்றில் பேசுவதுடன் மட்டும் நிற்காமல் ஜனாதிபதியையும் நேரடியாக கண்டு பேசியுள்ளனர்.

ஆனால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் இது பற்றி நாடாளுமன்றில் கல்முனையில் முஸ்லிம்களுக்கும் பிரச்சினை உண்டு என்றும் இது பற்றி கலந்துரையாட வேண்டும் என்ற வார்த்தையுடன் அடங்கிவிட்டார். இது பற்றி நல்லாட்சி காலத்தில் எத்தனையோ கலந்துரைடாடல்கள் நடைபெற்று அவை அனைத்தும் தோல்வியில் முடிந்துவிட்டன.

இந்த நிலையில் ஹக்கீம் மீண்டும் பழைய பல்லவி பாடாது எதிர்க்கட்சியில் உள்ள முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் ஜனாதிபதியைச் சந்தித்து கல்முனையை இனரீதியாகத் துண்டிப்பதை அனுமதிக்க முடியாது என்றும் தமிழ் மக்களுக்கு பாண்டிருப்பு செயலகம் வழங்கலாம் என்பதையும் வலியுறுத்த வேண்டும். - என்றார்.

# ஆத்ம சிவப்பிராப்தி நாராயணனுக்கு இறைபிரார்த்தனை செய்கின்றோம்

## இந்துக் குருமார் அமைப்பு அறிக்கை



நாராயண வாத்தியார் என நாம் எல்லோரும் அன்புடன் அழைத்து பணியும்சிவஸ்ரீவிஸ்வ நாராயணகுருக்களின் தேகம்நீத்த செய்தி அறிந்து மிகவும் கவலைஅடைந்தோம். ஒருவிப்ரசிரேஷ்டராக பல்மொழி ஆளுமை மிக்கவராக, அன்புடன் அனைவரையும் அரவணைக்கும் பண்பாளராக திகழ்ந்தவர்.

- இவ்வாறு தனது அஞ்சலி உரையில் இந்துக்குருமார் அமைப்பின் தலைவராகிய சிவாகமகலாநிதி சிவஸ்ரீ கு.வை. க. வைத்தீஸ்வர குருக்கள் அமன் செயலாளராகிய சிவஸ்ரீ ச. சாந்தரூப குருக்கள் ஆகியோர் ஒப்பமிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

அதில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளவை வருமாறு -

கனடா, ஆஸ்திரேலியா, தென் ஆப்பிரிக்கா, மலேசியா, சிங்கப்பூர் உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் உள்ள சைவ ஆலயங்களில் நடைபெறும் சிறப்பு கிரிகைக ளில் பங்கேற்புடன் ஆலோசனைகளையும் வழங்கியவர்.

பல சிறப்பு வாய்ந்த குருமார்களை உருவாக்கிய பெருமைக்குரியவர். அவரது இழப்பு மிகவும் கவலையை அளித்துள்ளது.

அமரரது ஆத்ம சிவப்பிராப்திக்குஇந்துக் குருமார் அமைப்பின் சார்பில் இறை பிரார்த்தனை செய்கிறோம். அத்துடன் உறவுகளுக்கு எமது ஆறுதலை பகிர்ந்து கொள்கிறோம். ஓம் சாந்தி. - என்றுள்ளது.

# பிரதான நீர்க்குழாய் திருத்தம் பூர்த்தி காரைதீவில் விநியோகம் வழமைக்கு



(சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட ஏற்பட்ட பெரு வெள்ளத்தில் உடைத்தெறியப்பட்ட பிரதான நீர்க் குழாய்களின் முக்கிய திருத்த வேலைகள் பூர்த்தியாகியுள்ளன.

கடந்த பன்னிரெண்டு நாள்களாக நயினாகாட்டுப் பகுதியில் பிரதான குழாய்கள் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையால் இரவு பகலாக திருத்தம் செய்யப்பட்டு வந்தன.

சனிக்கிழமை பகல் குறித்த குழாய்கள் திருத்திப் பொருத்தும் பணி நிறைவு பெற்றிருக்கின்றன.

குறித்த குழாய்கள் எதிர்வரும் வெள்ள அனர்த்தத்தின்போது சேதமடையாமல் இருக்க உரிய தடுப்பு அணை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் அக்கரைப்பற்று பிராந்திய முகாமையாளர் ஹைதர் அலி, பொறியியல் பிரிவுப் பொறியியலாளர் தாமோதரம் வினாயகமூர்த்தி உள்ளிட்ட உத்தியோகத்தர்கள் நேற்றும் களத்தில் நின்று இறுதிக்கட்ட பணிகளில் ஈடுபட்டனர்.

கடந்த 12 நாள்களாக தண்ணீர் இன்றி 28 கிலோமீற்றர் நீளமுள்ள பிரதான குழாய்கள் இருந்தன. அவற்றில் முதலாவது தண்ணீர் ஏற்றி பரிசோதிக்கும் சோதனை நிகழ்வும் இடம்பெற்றது.

அனைத்தும் பூர்த்தியாகும் பட்சத்தில் ஞாயிற்றுக்கிழமை பெரும்பாலும் குடிநீர் விநியோகம் வழமைபோல் இடம்பெறலாமெனக் கூறப்படுகிறது.

கடந்த 12 நாள்களாக நிந்தவூர், காரைதீவு, மாளிகைக்காடு, சாய்ந்தமருது ஆகிய பிரதேசங்களில் குழாய் நீர் விநியோகம் பாதிப்பு ஏற்பட்டிருந்தது.

குறிப்பாக காரைதீவுக் கிராமத்திற்கு குழாய் நீர் விநியோகம் முற்றாக தடைப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



காலைக்கதிர் Kalaikkathir

# ஜனநாயகத்தில் பலதரப்பட்ட குரல்களின் பங்களிப்பு என்றைக்கும் இன்றியமையாதது

## சஜித்துடனான சந்திப்பில் அமெரிக்க தூதுவர் தெரிவிப்பு

ஜனநாயகத்தில் பலதரப்பட்ட குரல்களின் இன்றியமையாத பங்களிப்பு குறித்து எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட தரப்பினருடன் கலந்துரையாடப்பட்டது.நிர்வாகம்,பொறுப்புக்கூறல் மற்றும் பொருளாதார செழிப்பு உள்ளிட்டவற்றுக்கு முன்னுரிமையளித்து இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றதாக இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான சஜித் பிரேமதாஸ மற்றும் இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரப் பணியகத்தின் உதவி இராஜாங்கச் செயலாளர் டொனால்ட் லூ, அமெரிக்க திறைசேரியின் உதவி செயலாளர் ரொபர்ட் காப்ரோத், அமெரிக்க தூதுவர் ஜூலி சங் உள்ளிட்ட குழுவினருக்கு இடையிலான சந்திப்பு வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றது.

இது தொடர்பில் தனது ருவிட்டர் பக்கத்தில் செய்துள்ள பதிவிலேயே ஜூலி சங் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் இதன்போது சமகால இலங்கையின் பல்வேறு சமூக, பொருளாதார மற்றும் அரசியல் விடயங்கள் தொடர்பில் இரு தரப்பு அவதானம் செலுத்தப்பட்டதாக எதிர்க்கட்சி தலைவர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவர் (யுஎஸ்எயிட்) நிறுவனத்தின் ஆசியப் பணியகத்துக்கான பிரதி உதவி நிர்வாகி அஞ்சலி கவுர், இலங்கை பணியகத்தின் பணிப்பாளர் கேப்ரியல் கிராவ், டொனால்ட் லூவின் பணிக்குழாம் பிரதானி விர்சா பெர்கின்ஸ் உள்ளிட்டோர் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர்.



அதேபோன்று ஐக்கிய மக்கள் சக்தியையும் ஐக்கிய மக்கள் கூட்டணியையும் பிரதிநிதித்துவப்படுத்தி நாடாளுமன்ற உறுப்பினர்களான கபீர் ஹாசீம், ரிஷாத் பதியுதீன், பழனி திகாம்பரம், அஜித் பீ பெரேரா, முஜிபுர் ரஹ்மான், காவிந்த ஜயவர்த்தன மற்றும் எஸ்.எம்.மரிக்கார் ஆகியோர் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

# எலிக்காய்ச்சல் நோயாளர் எண்ணிக்கை அதிகரிப்பு

நாட்டில் இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 10 ஆயிரம் பேர் எலிக்காய்ச்சல் நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சீரற்ற வானிலை காரணமாக நாட்டில் எலிக்காய்ச்சல் நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இந்நிலையில், அதிகளவில் வெள்ளம் சூழ்ந்துள்ள இரத்தினபுரி, காலி, களுத்துறை, குருணாகல் மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்களில் எலிக் காய்ச்சல் பரவும் அபாயம் அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

எலிக்காய்ச்சல் நோயால் வருடத்திற்கு 120 முதல் 200 பேர் உயிரிழக்கின்றனர்.

கண் சிவத்தல், காய்ச்சல், எரிச்சல் , காயங்களில் வீக்கம் ஏற்படல் மற்றும் கடும் மஞ்சள் நிறத்தில் சிறுநீர் வெளியேறுதல் என்பன எலிக் காய்ச்சல் நோய் அறிகுறிகள் ஆகும்.

எனவே, இந்த நோய் அறிகுறிகள் காணப்படுபவர்கள் உடனடியாக வைத்தியரை நாடுவது அவசியம் என சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

# எல்லை தாண்டிய மனிதாபிமான உதவி!

(சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டத்தில் ஏற்பட்ட பெருவெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்ட காரைதீவு பிரதேசத்திற்கு கல்முனை மாநகர சபையினர் வவுஸர் மூலம் குடிநீரை நேற்று வழங்கினர்.

இது எல்லை தாண்டிய மனிதாபிமான உதவியாக கருதப்படுகிறது. கல்முனை மாநகர சபை எல்லைக்குள் காரைதீவு இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சாரதியே உதவியாளராகவும் நின்று சேவையாற்றி வருகிறார்.

கடந்த 12 நாள்களாக ஆலயங்கள் பிரதேச சபை பொது அமைப்புகள் இராணுவம் தனியார் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகள் வழங்கி வந்தன.



# மத்திய முகாமில் வெளிநோயாளர் பிரிவு திறப்பும் தளபாடங்கள் வழங்கி வைப்பும்

(நூருல் ஹுதா உமர்)

மத்தியமுகாம் பிரதேச வைத்தியசாலையில் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட வெளிநோயாளர் பிரிவு நேற்று (சனிக்கிழமை) கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஷகீலா இஸ்ஸதீனால் திறந்து வைக்கப்பட்டதுடன் வைத்தியசாலைக்கு தேவையான தளபாடங்களும் வழங்கிவைக்கப்பட்டன.

வைத்தியசாலையின் பிரதேச வைத்திய அதிகாரி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிராந்திய கண்காணிப்புமற்றும்மதிப்பீட்டுபிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சி.எம்.மாஹிரும் திட்டமிடல் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எம். சாபியும் விசேட அதிதிகளாக பங்குபற்றியதுடன் விசேட உரைகளையும் நிகழ்த்தினர்.





இதன்போது பற்சிகிச்சை பிரிவின் வேலைத்திட்டங்களை விரைவுபடுத்துவது தொடர்பில் வைத்தியசாலையின் அபிவிருத்திச் சங்க குழுவினருடன் விரிவாக ஆராயப்பட்டதுடன் வைத்தியசாலையின் ஏனைய தேவைகள் மற்றும் நோயாளிகளுக்கான சேவையை மேலும் விரிவுபடுத்துவது தொடர்பிலும் இந்நிகழ்வின் போது கலந்துரையாடப்பட்டன.

# சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட சொகுசுக் கார் சுங்க அதிகாரிகளால் மீட்பு

சட்டவிரோதமாக இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட சொகுசு கார் ஒன்று சுங்க வருமான கண்காணிப்புப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

சுமார் 24 மில்லியன் ரூபா பெறுமதியான டொயோட்டா ப்ரியஸ் ரக சொகுசு கார் ஒன்றே கைப்பற்றப்பட்டுள்ளது.

ஜப்பானில் இருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட கன்டெய்னரில் இருந்து இந்த கார் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கடந்த இரண்டு மாதங்களில் சட்டவிரோதமாக இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட 200 வாகன உதிரிப்பாகங்கள் சுங்க வருமான கண்காணிப்பு பிரிவினரால் நேற்று (சனிக்கிழமை) ஊடகங்களுக்கு காட்சிப்படுத்தப்பட்டன.



காலைக்கதிர் Kalaikkathir

# பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிக்கக்கோரி 16 நாள் வேலை திட்டம்

## திருகோணமலையில் நடந்தது

(ஹஸ்பர்)

பெண்களுக்குஎதிரானவன்முறைகளைஒழிக்கதிருகோணமலையில் 16நாள் செயற்பாடு எனும் வீதி ஊர்வலம் ஒன்று வெள்ளிக்கிழமை இடம் பெற்றது.

மேற்படி நிகழ்வை திருகோணமலை மாவட்ட பெண்கள் வலையமைப்பு ஏற்பாடு செய்திருந்தனர்.

மாவட்ட பெண்கள் வலையமைப்பின் பணிப்பாளர் சட்டத்தரணி பிரசாந்தினி உதயகுமார் தலைமையில் இடம் பெற்ற குறித்த நிகழ்வில் திருகோணமலை துறை முக பொலிஸ் முன்றிலில் இருந்து உட்துறை முக வீதியில் உள்ள இந்து கலாசார மண்டபத்தை சென்றடையும் வகையில் 1000 பெண்கள் அடங்கிய வகையில் ஊர்வலமாக விழிப்புணர்வு பதாகைகளை ஏந்தியவாறு சென்றனர்.



பெண்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்கள் தொடர்பிலும் பல விழிப்புணர்வூட்டல்களை இதன் போது முன்னெடுத்திருந்தனர்.

ஆண் பெண் என்ற ரீதியில் கட்டமைக்கப்பட்ட வன்முறைகள் மற்றும் பெண்கள் சிறுமிகளுக்கெதிரான வன்முறைகளை தடுக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்ற கொள்கை ஊடாக இதனை முன்னெடுத்திருந்தனர்.

இதனை தொடர்ந்து குறித்த விழிப்புணர்வு நடைபவணியின் பின்னர் இந்து கலாசார மண்டபத்தில் நிகழ்வொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டது .

இதில் பெண்களுக்கெதிரான வன்முறை சம்பவங்கள் ஒழிப்பது தொடர்பான பல கலை கலாசார நிகழ்வுகளும் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது .

இதன் போது உரையாற்றிய சட்டத்தரணி பிரசாந்தினி உதயகுமார் 16நாள் செயற் திட்டத்தில் ஒன்றாக இணைந்து ஆண், பெண் வேறுபாடின்றி வன்முறைகளை ஒழிக்க முன்வர வேண்டும் .இதனை முன்னிருத்தி திருகோணமலையில் இத் திட்டத்தை முன்னெடுக்கிறோம் .1000 பெண்கள் ஒன்றிணைந்து ஊர்வலமாக இதனை முன்னெடுத்துள்ளோம்.




பெண்களின் உணர்வுகளை மதித்து அவர்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிக்க அனைவரும் முன்வர வேண்டும் இதற்காக அரசும் முன் வந்து பெண் உரிமைகளை பாதுகாத்து அவர்களுக்கான முன்னுரிமைகளை வழங்க வேண்டும்.- என்றார்.



மேற்படி நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கிழக்கு மாகாண ஆளுனர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்னசேகர மற்றும் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாராச்சி உட்பட பலர் கலந்து கொண்டனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.12.2024இல் வெளியிடப்பெற்றது